SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

ஐயா! எந்த வழி போவது?

—படம்.

காணமற்போன சங்கிலி

—(மகாத்மா காந்தி)

அக்பரும் தான்ஸனும்

—(நாடகம்)

பதிவிரதை

—பாரதியார்.

சுவரொட்டி யுத்தம்

பாப்பா வெங்கடராமய்யர்

—ஈ. கிருஷ்ணய்யர்.

அனுவசியமான தடபுடல்

—திப்பு.

புத்தகம் 4. பங்குனி மீ 24உ (6-4-34) வெள்ளி இதழ் 19.



'கொஞ்சம் கவனிக்கவேண்டும்'

"பொது ஜன வாழ்வு புதிது புதிதாய்ப் பிறந்து கொண்டேயிருக்கிறது. பொது ஜன உதவியால்தான் நமக்கு காலட்சேபம்! நமக்கு கீர்த்தி! ஆனால் அவர்களைத் திருப்தி செய்யும் முயற்சி நமது அந்தரங்க ஸ்வபாவங்களையெல்லாம் அடக்கித் தொலைக்கிறது. சாயக்காரர் மாதிரி பல வர்ணங்களைத் தயாரிக்கும் தொழிலில் நாம் ஈடுபடுவதா?" என்று ஓர் புலவன் அழுததாக ஷேக்ஸ்பியர் 'அட செல்வமே!' (Chide fortune) என்ற கவிதையில் எழுதியிருக்கின்றான். ஷேக்ஸ்பியரின் இந்த சித்திரம் நூற்றுக்கு நூறு சரியானது.

எழுத்தாணிக் காலத்திலிருந்து டைப்ரைட்டிங் சகம் வரையில் எழுத்தாளன் பிழைப்பே இப்படித்தான் இருக்கிறது. அரசனின் போஷணையிலோ, சீமானின் ஆதரவிலோ இருந்து பிழைத்து வந்தவர்கள் போஷகர்களைப் பற்றிப் புகழ்ப்பாக்கள் பாடி வாழவேண்டியிருந்தது. "கல்லாத ஒருவனை நான் கற்றாயென்றேன்" என்று தனிமையில் பாடித் தங்களை குத்திக்காட்டிப் பாடிக்கொள்ளவேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் அரசனும் சீமானும் இருந்த பீடத்தில் இன்றைக்கு ஸ்ரீயுத பொது ஜனம் அவர்கள் அமர்ந்திருக்கிறார். அவரைத் திருப்தி செய்து வாழ முயற்சிப்பதில் தன் 'ஆத்ம திருப்தியை'க் கொஞ்சம் ஒதுக்கி வைத்தே வேலை செய்யவேண்டியிருக்கிறதாகச் சொல்கின்ற ஆசிரியர்களும் உண்டு. "பின்னே பசியென்னும் வேட்டை நாய் துரத்த, முன்னே தேவையும் கூப்பிட்டுக் கொண்டிருந்தால் புலவன் என் செய்வான்?" என்று இன்னொரு ஆங்கில ஆசிரியரும் கூறியிருக்கின்றார்.

மனோரதத்தை விட்டுக் கொடுத்தல் என்பது ஒரு விஷயம். மனோரதத்தை முற்றிலும் அடிமையாக்கி விடுவது வேறு விஷயம். கேவலம் காசுக்காகவும், படர்க்கைத் திருப்திக்காகவும் தன் ஆத்மாவையே அடகு வைத்து விடுவதற்கு சில ஆசிரியர்களின் மனது இடங் கொடுப்பதில்லை. அவர்கள் இலக்கிய சமூகத்திலேயே புரட்சிக்காரராகி விடுகின்றனர். வேணுமென்றே வறுமையை ஆலிங்கனம் செய்து கொள்ளுகின்றனர். 'அட்சர லட்சம்' கிடைப்பதையும் தூசென மதித்தவருண்டு. ஏனெனில் எதுவும் 'தொழில்' என்ற ரீதிக்கு வந்தால் அடக்க ஒடுக்கம், அடிமைத்தனம் முதலியவைகளும் சேர்ந்து கொள்ளுமன்றோ! ஆசிரியத் தொழிலும் இந்த விதிக்குப் புறம்பாகுமா?

ரூஸோ என்ற ஆசிரியர் இருபது வருஷ காலம் ஆலோசித்து, மூன்று வருஷ காலத்தைச் செலவிட்டு 'எமெல்' என்ற நூலை எழுதி முடித்தார். ஆனால் அந்த நூலுக்குக் கிடைத்த அத்தனை பணம் ஐந்தே வாரத்தில் தயாரிக்கப்பட்ட 'நாடகம்' ஒன்றினால் அவருக்குக் கிடைத்ததாம். 'எமைல்' என்ற நூல் இன்றைக்கும் பிரெஞ்சு இலக்கியத்தை அழகு படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே பணத்தின் வருவாய்க்கும் இலக்கிய உன்னதத்திற்கும் சம்பந்தமேயில்லை என்பது தெரிகிறது.

எப்போதும் பழையன வற்றையே திருப்பத் திரும்ப பாடிக் கொண்டோ வியாக்யானம் செய்து கொண்டோ இருக்கும் ஆசிரியர்களுண்டு. நிகழ் காலத்தினின்று 50 வருஷத்துக்கு முன்னே தாண்டிக் குதித்து எழுதிக் கொண்டு போகும் ஆசிரியர்களுண்டு. ஆனால் கீர்த்தியையும், பணத்தையும் தன் கண்ணாலேயே பார்த்து விட விரும்புகின்ற ஆசிரியர்கள் உலக ஓட்டத்துக்குத் தக்கபடி தமது மனோரத்தை இணைத்து எழுதுவதில் முனைந்து நிற்பார்கள். தங்களுடைய லட்சியத்துக்கு பொது ஜனங்களையும் அழைத்துச் செல்ல எழுதுகின்ற ஆசிரியர்கள் எப்படி எழுதினாலும் அவர்களுக்கு நாம் மதிப்புத் தரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆனால் ஜனங்களுடைய கேவல மனோபாவங்களுக் கேற்றபடி 'குழஞ்சான்' பாட்டுப் பாடிக்கொண்டு பொது ஜனங்களின் ரஸனைத் திறமையை வர வரப் பாழாக்கி விடும் பேனாக்காரர்களும் உண்டு. மக்களின் ரஸனைத் திறமையும், தராதர அறிவும் நைந்து போகாதபடி பார்த்துக் கொள்ளும் பெரிய பொறுப்பு இக்காலத்தில் பத்திரிகைகளின் வசமேயுளது. பத்திரிகைகளின் மூலம் இலக்கியத்தையே சிருட்டிக்க முடியுமென்பது மேனாடுகளின் நவீன அநுபவம். அத்தகைய முயற்சியை இப்போதுதான் தமிழ் நாட்டில் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். தமிழ் நாட்டில் இப்போது தான் படிப்பவர்களின் தொகையும் அதிகமாயிருக்கிறது. இந்த சமயத்தில் 'உயர்ந்த நோக்கத்தோடு எழுதுகின்றோமா' என்பதை பேனாக்காரர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். எழுதுபவர்கள் செவ்விய நோக்கோடு எழுதுகின்றார்களாவென்பதை வாசகர்களும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். லட்சியம் சிறப்புற்றதானால் அது இலக்கியம் தானே!

—சங்கு ஸுப்ரஹமணியன்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 | ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] பங்குனிமீ 24உ வெள்ளிக்கிழமை (6—4—1934) [No. 19

மாயமான் மோகம்

இது சோதனைக் காலம்

அசதி அலுப்பை யுண்டாக்கும்; அலுப்பு அறிவைத் தடுமாறச் செய்யும்; அசதிச் சமயங்களைப் பொறுமையோடு கடப்பதுதான் அறிஞர்கட்கு அழகு. இந்தியாவின் சுதந்திரப் போரில் தற்போது 'கொஞ்சம் மந்தமான சமயம். எந்த நாட்டின் சுதந்திரப் போரிலும் இத்தகைய ஓய்ச்சல்கள் ஏற்பட்டதுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் தேசீயத் தலைவர்களின் பொறுமைக்குப் பலமான சோதனை யேற்படுகிறது. இத்தாலியின் கரிபால்டி, பத்து வருட காலம் வெளிநாட்டில் போய் பொறுத்திருக்கவில்லையா? ருஷியாவின் லெனின் பொறுத்திருந்த காலங்கள் இல்லையா? அதே ரீதியில் அஹிம்சா தர்மத்தை ஊன்று கோலாகக் கொண்டுள்ள நமது நாட்டிலும் பொறுமை காட்டவேண்டிய காலம் இது.

அசந்தர்ப்பக் கூட்டம்

ஆனால் சென்ற வாரத்தில் டெல்லியில் சில தலைவர்கள் கூடினார்கள். மீண்டும் 'சுயராஜ்யக் கட்சி'யை உயிர்ப்பிப்பதென்றும் டெல்லி சட்டசபையைக் கைப்பற்றுவதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இத்தகைய கூட்டமொன்றை நடத்துவதற்கு இதுதான் காலமா? இத்தகைய தீர்மானத்திற்கும் வருவதற்கு இதுதான் சந்தர்ப்பமா? தேச மக்களின் தலைமை ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபை அஞ்ஞாத வாசத்திலிருக்கும்போது, கண்மணிகள் போன்ற தலைவர்கள் சிறையில் இன்னமும் இருந்துகொண் டிருக்கும்போது, நாயகனை மகாத்மாவோடு ஒரு பேச்சுப் பேசுவதற்குக்கூட இணங்காது அதிகார வர்க்கம் விறைத்துக்கொண்டிருக்கும்போது, இந்த இசை கேடான சமயத்திலா தங்களுக்கும் சட்டசபை மோக மிருக்கிறதென்று சில காங்கிரஸ் தலைவர்கள் காட்டிக்கொள்ளவேண்டும்!

அது மாயமான்!

சட்டசபை யென்றால் அது ஏதோ புலி யென்றோ பிசாசென்றோ நாம் கருதவில்லை. எப்போதோ ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர் இந்த நாட்டின் அரசியலைப் பூர்ணமாக ஏற்று நடத்தத்தான் போகிறார்கள். ஆனால் எத்தகைய அரசியலை இந்த நாட்டில் பிரிட்டிஷார் நுழைக்கப் போகிறார்களென்று 'நோட்டம்' கூடத் தென்படாத இந்த சமயத்தில் சட்டசபைகளைக் கைப்பற்றப் போவதாகச் சொல்வது 'அசந்தர்ப்ப'மான தீர்மானமாகும். சட்டசபை என்பது ஒரு மாயமான். அதன் தள தளப்பும் மினுமினுக்கும் வசீகரம் மிகுந்தவை. ஒரு மாயமானின் அழகைக் கண்டு அன்று சீதாதேவியும் ஏமாறவில்லையா? அதே மாதிரி இன்றைக்கு 'சட்டசபை பிரவேசம்' என்ற மாரீசன், இராஜீயக் காட்டில் வந்து துள்ளிக்கொண்டிருக்கிறான். காங்கிரஸ் மகாசபையில் சட்டசபை மோகம் பிடித்தவர்கள் எப்போதுமே சிலர் இருந்து கொண்டு தானிருக்கிறார்கள். அதே கூட்டம்தான் இன்றைக்கு டெல்லியிலும் சட்டசபைப் பிரவேசத் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது. இந்தத் தீர்மானம் காங்கிரஸ் மகா

சபையை தற்பொழுது கட்டுப்படுத்தாது என்பதை பிரிட்டிஷாரும், தேச மக்களும் அறிந்திருக்கிறார்கள்.

கொஞ்சம் கபடமும்

இந்தப் புதிய கட்சியின் பிறப்போடு கபடமும் கொஞ்சம் கலந்திருக்கிறது என்பதையும் சொல்லத்தான் வேண்டும். "பூனாவில் தலைவர்கள் விடுத்த ஆக்கல் திட்டத்தை நிறைவேற்றும்" எண்ணத்தோடு இந்தப் புதிய கட்சி ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். கதர் வேலைக்கும், ஹரிஜனப் பணிக்கும், மது விலக்குக்கும் புதியதொரு கட்சி மூலைத்தால்தான் முடியும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவைகளைப் பற்றிச் சொல்லாத போனால் தேசத்தில் எதுவும் செல்லாது என்பது டெல்லியில் கூடினவர்கள் அறிவார்கள்.

காந்தியடிகளின் திருநாமம்

காந்தியடிகளின் பெயரையும் உபயோகிக்க இந்தப் புதிய கட்சியார் முயன்றிருக்கின்றனர். 'முன்னே வட்ட மேஜை மகா நாட்டில் காந்தி என்னென்ன சொன்னாரோ அவைகளைச் சாதிக்கவே இந்தக் கட்சி' என்று ஓர் சொக்குப்பொடியையும் கலந்திருக்கிறார்கள். இந்த மகா நாட்டின் தீர்மானத்துக்கு காந்தியடிகளின் ஆசி கிடைத்து விடும் என்று காட்டுவதற்கு என்னென்ன சரடுகளை முதலில் திரித்துப் பரப்பலாமோ அத்தனையையும் செய்திருக்கிறார்கள். அது மட்டுமா?

வீரநாதம்!

"அடக்குமுறைச் சட்டங்களை யெல்லாம் தகர்த்தெறிவதற்கே இந்தக் கட்சி" என்று இன்னொரு வீர நாதத்தையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டசபையின் மூலமாக எந்த அடக்கு முறைச் சட்டத்தையும் நீக்க முடியாதென்பதும், வெள்ளைக் காகிதத் திட்டத்தின்படி பார்த்தாலும் அவசரச் சட்டங்களை வீசும் சக்தி வைஸ்ராயிடமுண்டு என்பதையும் இவர்கள் அறியார்களா என்ன? அறிவார்கள். அப்படியிருக்க இப்படி உச்சஸ்வரத்தில் பேசுவானேன் என்றால் தேசத்தினிடம் இத்தகைய விஷயங்களைச் சொன்னால்தான் ஏறும் என்பது அவர்களுக்குத் தெரியும். இந்த ஏமாற்றம் எத்தனை நாளைக்கோ!

பிரிட்டிஷார் போக்கு

இச்சமயத்தில் நேயர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபக மூட்டுகின்றோம். சட்டமறுப்பு இயக்கத்தால்தான் தேசத்தில் ஓர் புதிய சக்தி எழுந்தது. அந்தச் சக்தியைக் கண்டுதான் பிரிட்டிஷ் அரசாங்கமும் திகைத்தது. எந்த சமயத்தில் என்ன நேரிடுமோ என்ற பயம் இன்னமு மிருக்கிறது. அவசரச் சட்டங்களை ரத்து செய்யாததே இதற்கு ஓர் உதாரணம்.

காந்தியடிகளின் ஆமோதிப்பும், காங்கிரஸ் மகாசபையின் ஆமோதிப்பும் இல்லாத எந்த அரசியல் திட்டத்தையும் நாட்டில் அமுலுக்குக் கொண்டுவர முடியாதென்பதைப் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் அறிவர். மேலும் இந்த சட்ட சபைப் பிரசாரகர்களிடம் மதிப்போ, பயமோ, பிரிட்டிஷாருக்குக் கிடையவும் கிடையாது. விஷயம் இவ்வாறிருக்க டெல்லியில் இந்த வீண் தீர்மானத்துக்கு வருவானேன்?

காங்கிரஸுக்கே உரிமை

காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு என்றைக்கு நமக்கு சவுகர்ய மேற்படுகிறதோ அன்றைக்குத்தான் தேசத்தில் புதிய திட்டமோ, அமைதியோ ஏற்படக்கூடும். காங்கிரஸ் ஒரே மனதாக அங்கிகரிக்கும் தீர்மானங்களைத்தான் தேசம் ஒப்புக் கொள்ளும். அந்தக் காலத்தை எதிர் நோக்கிக் கொண்டு பொறுமையோடிருப்பதுதான் நமது கடமை.

ஐயா! எந்த வழி போவது?



—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

டெல்லியில் கூடிய சில காங்கிரஸ் வாதிகள் ஆக்கல் திட்டங்களை மறந்து சட்டசபைப் பிரவேச வழியைப் பற்றி ஆலோசித்தார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இன்றைக்குள்ள சட்டசபை மோகம் பிறகு சர்க்காரோடு பரஸ்பர ஒத்துழைப்பு என்ற வழியைக்காட்டும். கடைசியில் பணிவான ஒத்துழைப்பு என்ற வழி தென்படும். தேசீய ஊக்கத்தை இப்படியா திரவமாக்குவது?

அரிசியும் பட்டாணியும்

சென்ற வாரத்தில் சென்னைத் துறைமுகத்தில் சீயத்தினின்று 5,000 மூட்டை அரிசியும் 570 மூட்டை பட்டாணியும் வந்திறங்கியது. இந்த வருடத்தில் இதுவரை அந்நிய அரிசி 38,70,00 மூட்டைகள் இறக்குமதியாயிருக்குமென்று சொல்கிறார்கள். இப்படி அந்நிய அரிசி இறக்குமதியாவதைத் தடுக்காவிட்டால் சுதேச அரிசி என்ன கதியாவது?

நமது உலைக்கூடம்

விசிறிக்கு காசில்லையா?

தங்கத் தொட்டிலில் வளர்ந்த ஜவஹர்லாலுக்குச் சிறையில் விசிறிக் கொள்ள ஒரு விசிறி கொடுப்பதற்கு சர்க்காரிடம் பணமில்லையா? எழுதுவதற்குக் கடுதாசி தர அவருக்கு சர்க்கார் மறுப்பதைக் கண்டித்து அன்று சங்கில் எழுதி யிருந்தோம். இப்போது ஒரு விசிறி தருவதற்குக்கூட ஜெயில் அதிகாரிகள் தயங்குவதாகக் கேள்விப் படுகிறோம். அதிகாரிகள் போக்கைக் கண்டிக்க வார்த்தைகளே கிடைக்க மாட்டேனென்கிறது. சிறையைச் சம்பூர்ணமாக நரகலோகமாக்கி விடுவதென்று ஜெயிலதிகாரிகள் தீர்மானித்திருக்கிறார்களா என்ன? இப்போது ஜவஹர்லால் ஜர்மன் பாஷை கற்றுக்கொண்டிருக்கிறாராம். மூன்று அகராதிகள் எப்போதும் அவரிடமே யிருக்கவேண்டி யிருக்கிறது. அது தவிர இரண்டு புத்தகங்களுக்குமேல் வைத்துக்கொள்ள அவர் அநுமதிக்கப் படுவதில்லையாம். என்ன கட்டுப்பாடுகள்! இப்படி வங்காள துரைத்தனம் ஒரு பெரிய மனிதனை நடத்துவதை இந்திய அரசாங்கமும் பார்த்துக்கொண்டு சும்மா யிருக்கிறதே அட வெட்கக்கேடே!

சண்டப் பிரசண்டன்!

ஊமைக்கு உளருவாயன் சண்டப் பிரசண்டன்! ஸ்வராஜ்யக் கட்சி இந்தியாவில் உண்டானதால் காந்தீயம் தலை கவிழ்ந்ததென்று மார்னிங் போஸ்ட் என்ற சீமைப் பத்திரிகை கொக்கரித்தது. உடனே டெயிலி டெலிகிராப் பத்திரிகையும் "இனி இந்தியாவில் புதுப் புதுத் தலைவர்கள் தோன்றுவர். சட்டமறுப்பு தோற்று விட்டதென்றும், சட்டசபைப் பிரவேசத்தினால்தான் இனி தேசத்தில் செல்வாக்கு உண்டென்றும் தலைவர்கள் அறிந்து கொண்டனரென்றும் தெரிகிறது" என்று எழுதியிருக்கிறது. இரண்டு அபிப்பிராயங்களும் சுத்த மடத்தனமான கருத்துக்கள். சுயராஜ்யக் கட்சியைச் சிருட்டித்த அந்தச் சிறிய கூட்டத்தினர் கூட மகாத்மா காந்தி தயவை எதிர்பார்த்துத்தான் செய்திருக்கிறார்கள். தேசத்தில் காந்திஜீக்கு செல்வாக்கு இருக்கிறதா இல்லையா வென்பதை இன்றைக்கு பீகாருக்குப் போய் அவரோடு பிரயாணம் செய்தால் உண்மையை அறியலாம்.

அது ஒரு 'சாம்பிராணி!'

ஹென்ரி பேஜ்கிராப்ட் என்ற பிராணி இங்கிலாந்தில் பிரமாதமாகக் குதித்துக் கொண்டிருக்கிறது. சர்ச்சிலோடு சேர்ந்துகொண்டு தனக்கு இந்தியாவைப் பற்றிப் பிரமாதமான ஞானம் இருப்பதாக அவுட்டா அடிப்பவர்களில் இந்த பேஜ்கிராப்டும் ஒரு பேர்வழி. இந்த ஆசாமி சமீபத்தில் செய்த ஓர் காரியத்தினால் எவ்வளவு இந்தியாவைப் பற்றிய ஞானம் தனக்கிருக்கிறது என்பதைக் காட்டிக் கொண்டு விட்டான்.

வி. டி. கிருஷ்ணமாச்சாரி என்பவர் பரோடா சமஸ்தானத்து திவான். ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரி என்பவர் டெல்லி அஸ்ஸெம்பிளியில் ஒரு சில்லறை அங்கத்தினர். இந்த மனிதருடைய அபிப்பிராயங்களை வி. டி. கிருஷ்ணமாச்சாரி யுடையது என்று நினைத்துக்கொண்டு பேஜ்கிராப்ட் ஏதேதோ சீமையில் எழுதினானாம். இரண்டு ஆட்களும் வேறு வேறானவர்களென்பது பிறகுதான் அந்தப் பிராணிக்குத் தெரிந்ததாம். இந்தியாவைப் பற்றிப் பிரமாதமாகத் தெரிந்தவனைப் போல அபிநயிப்பானேன்?

கதர் மலிவாகிறது

இந்த வாரத்தில் காதி வஸ்திராலயங்களில் கதர் வாங்கினால் 10 ரூபாய்க்கு எட்டு அணாவும், 20 ரூபாய்க்கு 1 ரூபா வீதமும் 50 ரூபாய்க்கு 3 ரூபா வீதமும் தள்ளித் தருவதென்று சர்க்கா சங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். புனிதமான தேசீய வாரத்தில் தமிழ் நாட்டில் ஏராளமாகக் கதர் விற்பனை யாகுமென்று எதிர் பார்க்கின்றோம்.

கைமேல் பலன்!

தீக்குச்சி வரி உயர்வதால் என்ன நஷ்டம் நாட்டுக்கு ஏற்படும் என்பதை சங்கில் எழுதியிருந்தோம். நாம் எண்ணியபடியே நடந்திருக்கிறது. சாத்தூர், விருதுநகர், சிவகாசி, அருப்புக் கோட்டை, முதலிய இடங்களிலுள்ள சுமார் 50 தீக்குச்சித் தொழிற்சாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாகச் செய்தி கேட்டு வருந்துகின்றோம். புதிய வரியை வேறு எப்படித்தான் தொழிற்சாலைகள் கண்டனம் செய்வது? அநேக தொழிற்சாலைகள் மூடப்பட்டதனால் அந்த ஜில்லாவிலுள்ள ஆயிரக் கணக்கான ஏழைகளைப் பட்டினிப்பேய் அழைக்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அவதூறு வாய்!

எப்போதும் பிறர்மீது ஏதாவது கற்பனையான அவதூறுகளைக் கூறிக் கொண்டு அலைகின்ற பாட்டிகளை சில கிராமாந்திரங்களில் கண்டிருக்கிறோம். அந்தப் பாட்டிகளுக்கும் ஸர் ஹென்றி கிட்னி என்ற ஆங்கிலோ இந்தியத் தலைவனுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. அவர் லாகூரில் சொன்னாராம்:

"துறைமுகங்களில் அதிக இந்தியர்களை உத்யோகஸ்தர்களாக நியமித்திருப்பதால் தான் திருட்டுத்தனமான துப்பாக்கிகளும் ரவைகளும் இந்தியாவுக்குள் நுழைகின்றன. ஆனால் அந்த உத்தியோகங்களை ஆங்கிலோ இந்தியர்களுக்குக் கொடுத்தால் இந்தத் திருட்டுத்தனம் நடைபெறாது."

வேணுமென்றபோது, "நானும் ஒரு இந்தியன்" என்று சொல்லிக்கொள்ள இந்த ஆங்கிலோ இந்தியர் கிட்னி தவறியதில்லை. ஆனால் இப்போதோ இந்தியர் திருட்டுக்கு உடந்தையாயிருப்பவர்களென்று அவதூறு பேசுகின்றார். துறைமுகங்களில் உத்தியோகங்கள் வகிக்கும் இந்தியர்கள் கிட்னியின் இந்த அவதூறுக்குத் தக்க பதில் தருவார்களாக! வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று கண்டபடி பிதற்றிக்கொண்டு இவர் அலைவதை இப்படியே விட்டு வைக்கலாமா?

கதரையே

அணியுங்கள்

இது நல்ல அபிப்பிராயமா ?

சென்னையின் பத்திரிகை யுலகத்தைப் பற்றி இதர மாகாணத்தின் அபிப்பிராயமெவ்வாறிருக்கிறது என்று அறிந்துகொள்ள வாசகர் விரும்புவது சகஜம். சமீபத்தில் ஹிந்துஸ்தான் டைம்ஸ் எழுதியுள்ள ஒரு சிறு குறிப்பு நமது கண்ணிற் படுகிறது :—

"சென்னைப் பத்திரிகை உலகில் இப்போது ஓர் முக்கிய அம்சம் என்னவெனில், மனோவேதனையுள்ள இந் நாட்டில் தமாஷ் உணர்ச்சியை விருத்தி செய்ய அவர்கள் முயற்சித்து வருவதேயாகும்.........

ஒருவன், தான் ஏதோ விகடமாகப் பேசி விட்டதாக நினைத்துக் கொண்டு தானே சிரித்துக்கொள்வதுபோல் மேற்கூறிய விஷயமும் இருக்கிறது! சென்னை "மாகஜின்" களில் கதைகளுக்கும், வேடிக்கைப் படங்களுக்கும் குறைவேயில்லை. ஆனால் உயர்ந்த தத்துவமுள்ள தமாஷ்களை அவர்களுக்கு தற்காலத்திற் கேற்றவாறு உபயோகிக்கத் தெரியவில்லை. அவர்கள் எல்லோருக்கும் தெரிந்த தமாஷ் சம்பாஷணைகளை ஆங்கிலப் பத்திரிகைகளினின்று பெயர்த்து எடுத்து சம்பாஷிப்பவர்களின் பெயர்கள் ஸ்மித் என்றும், பிரௌன் என்றும் இருப்பதை ராமு என்றும் கோபி என்றும் மாற்றி வெளியிட்டு விடுகிறார்கள். வெள்ளைப் பெண்ணின் தொப்பி சம்பந்தமாக வேடிக்கைக் கதை இருந்தால், 'தொப்பி' என்பதை 'சேலை' என மாற்றி அவர்கள் உபயோகப் படுத்திக்கொண்டு விடுகிறார்கள். அத்தகைய வழக்கத்தை தடுக்க வேண்டியது அவசியமாகும். இன்னும் விகடமாகக் கூறும் விஷயங்கள், நமக்குத் தெரிந்த ஜனங்களின் போக்கை அனுசரித்ததாக இருக்கவேண்டும்."

நகைச் சுவையை இவ்வளவு தூரம் தாக்கி ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை எழுதியிருக்க வேண்டாமென்பது நமது அபிப்பிராயம். மேற்படி பத்திரிகாலயத்தில் மிஸ்டர் ஜோஸப், ஸ்ரீ பாரதி, ஸ்ரீ சங்கர் முதலிய பல தமிழர்கள் இருக்கின்றனர். அந்தக் காரியாலயத்தின் அபிப்பிராயத்தைத் தமிழர் கவுரவிக்க வேண்டியதுதான். ஆனால் தமிழ் மக்களுக்கு காமச் சுவை யூட்டுவதற்காக மட்டரகமான காதற் கதைகளையும் படங்களையும் வெளியிட்டுக்கொண்டு தமிழ்நாட்டில் சில பத்ரிகைகளிருக்கின்றனவே, அவைகளைப் பார்த்தால், ஹி. டைம்ஸ் என்ன அபிப்பிராயம் எழுதுமோ !

புது வருஷத்திற்கு செய்தி

(சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

தமிழ் வருஷப் பிறப்புக்கு முன்னதாக தேசீய வாரம் வருவது உபயோகரமான விஷயம். ஏப்ரல் 6-உ யின்று 13-உ வரை நமக்குப் புனிதமான தேசீய வாரமாகும். தீவிர உழைப்புக்கும் தியாகத்துக்கும் அறிகுறியாக நாடெங்கும் அனுஷ்டிக்கப்படுவது தேசீய வாரம்.

1919-ம் ௵த்தில் ஏப்ரல் 13-ல், ஜாலியன்வாலா தோட்டத்தில் நிகழ்ந்த மகத்தான யக்ஞத்தின் பயனாக இருள் நிறைந்திருந்த தேசத்தில் உணர்ச்சி வெளிச்சம் தோன்றிற்று. அந்த நிகழ்ச்சிகளை நாம் மறப்போமா ? அந்த வாரத்தை நாம் அனுஷ்டிக்க வேண்டியது அத்தியாவசிய மன்றோ! இந்தப் பதினைந்து வருஷகாலமாக அன்று மூட்டப்பெற்ற தியாக அக்னி, ஜ்வாலையோடு நமது குண்டத்தில் எரிந்துக் கொண்டிருக்கிறது. பக்தி சிரத்தையோடு யாககுண்டத்தில் நம் மூதாதையர் முற்காலத்தில் ஆஹூதி செய்தது போல் நாமும் இந்த வாரத்தில் 'உழைப்பு' 'தியாகம்' என்பவைகளை குறிக்கோளாகக் கொண்டு உழைக்கவேண்டும். நமது மூதாதையரின் அனுஷ்டானங்களைக் காலத்திற்கேற்றபடி மாற்றிக்கொண்டு அனுஷ்டித்து வருவது நமது கடமை.

தியாகத்திற்கு எவ்வளவோ வழிகளிருக்கின்றன. அவைகளுள் கதர், வாங்கி யணிவது ஒவ்வொருவரும் செய்யக்கூடிய சுலபமான பணியாகும். பிரும்மசாரிகள், கிரஹஸ்தர்கள் அனைவரும் இந்த யக்ஞத்தில் பங்கெடுத்துக் கொள்ளலாம். உழைக்கும் ஏழைகளுக்கு ஒரு பிடி சோறு அளிப்பது கதர். இதை சத்ர யாகத்துக்குச் சமானமாகச் சொல்லலாம்.

புது வருஷத்தை இந்த வேள்வியோடு தொடங்குவோம். பன்னிரண்டு மாதங்களிலும் நன்மை பொங்கும் !

ஏன் மூடு மந்திரம் ?

'நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்' என்பது ஓர் தமிழ்ச் செய்யுளின் வரி. 'காலனிஸேஷன் கமிட்டியார் சமீபத்தில் இந்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் விசாரணை அறிக்கையை இரகஸ்யமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று தென்னாப்பிரிக்கா சர்க்கார் சொல்லியிருக்கிறதாம். இந்த மூடு மந்திரம் ஏன் ?

தென்னாப்பிரிக்காவினின்று நமது இந்திய சகோதரர்களை விரட்டி விடுவதற்கான சூழ்ச்சிகளை அங்குள்ள சர்க்கார் செய்து வந்திருக்கிறது. இந்தியர்களை வெளியே யனுப்ப வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு 6000 பவுனைப் போன வாரத்தில்தான் தென்னாப்பிரிக்கா சர்க்கார் எடுத்து வைத்திருக்கிறது என்றும் செய்தி கேட்டோம். இந்தியர்களெல்லாம் போர்னியோ என்ற இடத்துக்கோ நியூ கினி என்ற பிரதேசத்துக்கோ குடியேறிச் செல்லலாமென்றும் அதற்கேற்ற வசதிகள் அந்நாடுகளில் இருப்பதாகவும் இந்த 'காலனி சேஷன் கமிட்டி' சிபார்சு செய்திருக்கிறதாக வதந்தி. இத்தனை வருடங்களாக நமது சகோதரர்கள் ஆப்பிரிக்காவில் உழைத்ததின் பயன் இதுதானா ? விழலுக்குப் பாய்ச்சிய நீர்தானா ? அங்குள்ள இந்தியர்களுக்கு வேறு இடம் தேடித் தருவதற்குக் காலனிஸேஷன் கமிட்டி வேறு எதற்கு ?

இந்தியர்களை அப்புறப்படுத்த அங்குள்ள வெள்ளையர்கள் செய்யும் தில்லு மில்லுகளுக்கு இந்திய சர்க்கார் இடம் தரலாகாது. தென்னாப்பிரிக்காவில் இன்று இந்தியர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார் களென்பது உலகறிந்த பகிரங்க விஷயம். அது சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பகிரங்கமாக உலகுக்குக் காட்ட வேண்டியதே நேர்மை. தென்னாப்பிரிக்கா சர்க்காரின் பசப்புக்கு இணங்கி மேற்படி விசாரணைகளை மூடி வைத்து இந்தியர்களை அங்கிருந்து அப்புறப் படுத்த இந்திய சர்க்கார் இசையுமாயின் அது இந்திய மக்களுக்கே செய்த மகா துரோகமெனவே நாம் கருதுவோம்.

அக்பரும் தான்ஸனும்

(என். பிச்சமூர்த்தி)

காட்சி 1

(அக்பர் பளிங்கு மாளிகை முகப்பில் வெண்ணிலவில் சாளரத்தின் வழியாய் தோட்டத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். முகம் அலுப்பினால் வாடியிருக்கிறது.)

அக்பர்—யாரடா சேவகன்?

(சேவகன் ஓடி வருதல்)

சேவகன்—ஹுஸூர்?

அக்பர்—மணி யென்ன?

சேவகன்—எட்டு, ஹுஸூர்.

அக்பர்—(அருவருப்புடன்) நமது ஆஸ்தான கவி இன்னும் என்ன செய்கிறான்? சோம்பேறி!

சேவகன்—மன்னிக்க வேண்டும், யார் ஹுஸூர்?

அக்பர்—முட்டாள்! நமது கவி தான்ஸன் எங்கே?

சேவகன்—இன்னும் வரவில்லை.

அக்பர்—(பொதுப்படையாய்) பொழுதே போகவில்லை.

சேவகன்—(வினயமாய்) நடனமாதர்கள் வந்திருக்கின்றனர். அழைத்து வரட்டுமா?

அக்பர்—உஸ்! வேண்டாம். தான்ஸனை அழைத்துவரச் சொல்லு.

சேவகன்—இதோ.

(சேவகன் போதல்)

அக்பர்—(தனிமையில்) தான்ஸனுக்கு சங்கீதத்தில் தெய்வப் புலமையிருந்தும் கூட அகம்பாவத்திற்கு மட்டும் குறைவில்லை.

(சேவகனும் தான்ஸனும் வருதல்)

சேவகன்—நான் அரண்மனை வாயில் வரையில் சென்றேன். எதிரே தான்ஸன் வேகமாய் வந்துகொண்டிருந்தார். இதோ அழைத்து வந்திருக்கிறேன்.

(தான்ஸன் தன் பட்டுடையால் வியர்வையைத் துடைத்துக் கொள்ளுகிறான்.)

அக்பர்—(பார்த்துவிட்டு) (மனதிற்குள்) பாவம்! (வெளிப்படையாய்) ஏனய்யா! காலத்தில் கிளம்பியிருந்தால் சிரமமின்றி வரலாமே. அதை விட்டுவிட்டு, ஊர் சுற்றித் திரிந்து நாழிகை கழித்துக் கிளம்பினால் உடலுக்கு வீண் வருத்தம்தான்.

தான்ஸன்—ஹுஸூர்! நதிக்கரையோரத்தில் உட்கார்ந்து நீரின்மேல் நிலாக்கதிர்கள் வெள்ளி வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்த்து மெய்மறந்து தன்மயமாய்விட்டேன். அரண்மனை தாஸ், பளீர் என்று கன்னத்தில் அறை விழுவதுபோல், எட்டு மணி அடித்ததும் விழுந்தடித்து ஓடோடியும் வந்தேன். ஹுஸூர்! நேரமானதற்கு மன்னிக்கவேண்டும்.

அக்பர்—போகட்டும். சேவகா! கவி தான்ஸனுக்கு பாரஸீகத்து மாதுளையும் ரோஜா ஷர்பத்தும் கொண்டு வா.

(சேவகன் அவைகளை ஒரு தட்டில் கொண்டுவருகிறான்.)

அக்பர்—கொஞ்சம் சிரமபரிஹாரம் செய்துகொள்ளும்.

(தான்ஸன் அவைகளை ருசி பார்க்கிறான்.)

அக்பர்—ஐயா! பொழுதே நகரவில்லை. கொஞ்சம் பாடுங்கள்.

(தான்ஸன் தொண்டையைச் சரிசெய்துகொண்டு சாரங்கியை வாசித்துக்கொண்டு பாடுகிறான்.)

அக்பர்—ஆஹா! (மறந்து) அப்பா தான்ஸன்! இந்த அமிருதத் தொனி எங்கே சம்பாதித்தாய்?

தான்ஸன்—இதென்ன பிரமாதம்!

அக்பர்—தன்னையே குறைவாகப் பேசிக்கொள்வது நல்லதல்ல. நினைப்பதற்கு எதிரிடையான பலன் கொடுக்குமே தெரியாதா?

தான்ஸன்—ஹுஸூர்! சமஸ்தானத்திற்குள் நான்தான் மேதை என்று தாங்கள் நினைக்கிறீர்கள் போலும்! ஆனால் உண்மை அப்படியல்ல. சூரியன்முன் விளக்குப்போல் என்னை ஆக்கக்கூடிய ஒரு பெரியார் இருக்கின்றார். அடாடா! அவர் பாட்டுக்கும் என் பாட்டுக்கும் தெய்வக் கணிகையின் சிலம்பொலிக்கும் நாய் குரைப்பதற்கும் உள்ள தாரதம்யம். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையாம்!

அக்பர்—(ஆவலுடன்) அந்த சூரியன் யார்?

தான்ஸன்—என்னுடைய குருமஹாராஜ்.

அக்பர்—அவர் பெயர்?

தான்ஸன்—என் வாயால் சொல்லும் வழக்கமில்லை.

அக்பர்—எழுதிக் காட்டலாமா?

தான்ஸன்—(ஸ்ரீஹரிதாஸ் ஸ்வாமி என்று எழுதிக் காட்டிவிட்டு) குருமஹாராஜ்! (என்று சொல்லிக் கண்ணீர் விடுகிறான்).

அக்பர்—ஆனால் தங்கள் குருவின் பாட்டை நான் கேட்க வேண்டாமா?

தான்ஸன்—கேட்கலாம்.

அக்பர்—சரி, உடனே அவரை வருவழையும்.

தான்ஸன்—ஹுஸூர்! ஏதோ ராவணன் என்று ஒருவன் சந்திர சூர்யர்களைத் தன் பணிக்கென்று அமர்த்தியதாக கேள்விப் பட்டிருக்கிறேன். அந்த ராவணன் உயிருடனிருந்து கூப்பிட்டனுப்பினால் கூட என் குரு மஹாராஜ் அசைய மாட்டார்.

அக்பர்—ஏனோ?

தான்ஸன்—அவருக்கு இவ்வுலகமே துச்சம். நாம் சொல்லி அனுப்பியா அவர் வருவார்?

அக்பர்—ஆனால் அவரும் அகம்பாவக்காரர்தானோ?

தான்ஸன்—(கடுமையாக) மஹாராஜ்! அவ்வார்த்தையை உடனே வாபீஸ் வாங்கிக்கொள்ளும். எங்கள் குரு மஹாராஜ் ஒரே அரசனுக்குத்தான் அடிமை. ஏக சக்ராதிபதி யென்றால் ஒருவரைத்தான் அறிவார்.

அக்பர்—(சிறிது அதட்டிய குரலில்) என்ன?

தான்ஸன்—ஆம், ஹுஸூர். அந்த ராஜாதி ராஜன் பெயர் ஸ்ரீ கிருஷ்ணன்.

அக்பர்—(உடனே தணிந்து) ஓ! அப்படியா? ஆனால் சரி.

தான்ஸன்—அது மட்டுமல்ல. எங்கள் குருவுக்கு லோகப்பிரஞ்ஞை கூட அதிகமாகக் கிடையாது. அவர் ஸதா வசிப்பது பிருந்தாவனத்தில். அவர் ஸதா உரையாடுவது கிருஷ்ணனோடு. அவர் பாடுவது பக்தி பரவசத்தோடு.

அக்பர்—ஆனால் அவருக்குத் தயை, தாக்ஷண்யம் ஒன்றும் கிடையாதா?

தான்ஸன்—உலகின் அம்புறாத்தூணியிலுள்ள பல விஷ அம்புகளில் தயை,

தாக்ஷண்யம் என்பதும் சேர்ந்திருக்கிருக்கின்றன. ஆண்டவனை நாடுபவருக்கு இந்த அம்பரா எதற்குத் தேவை?

அக்பர்—(திகைப்புற்று) அப்பொழுது என்ன செய்யலாம்?

தான்ஸன்—வேண்டுமென்றால், நாம் அங்கே போகவேண்டியதுதான்.

அக்பர்—சரி. எப்பொழுது போகலாம்?

தான்ஸன்—இஷ்டமிருந்தால் இப்பொழுதே போகலாம்.

அக்பர்—எங்கே போகவேண்டும்?

தான்ஸன்—யமுனை நதிக்கு.

(இருவரும் கிளம்புகிறார்கள்)

காட்சி 2

(ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்வாமி யமுனை ஆற்றங் கரையில் ஒரு கொன்றை மரத்தடியில் நின்று மரத்தை நோக்கி பாடிக்கொண்டிருக்கிறார்.)

ராகம்—சியாமா. தாளம்—ஆதி.

பல்லவி

ஸ்ரீ ஹரிதாஸ்—

தாமதம் ஏனோ?
கண்ணா! கிருஷ்ணா! (தா)
நானிங்கு நிலவினில்
மண்டிடும் காதல்கொண்டு
வீணிங்கு நின்று கொல்லும்
காலத்தைத் தூற்றி நிற்க (தா)
கண்ணும்தான் பூத்துப் போச்சு
காதும்தான் கும்மென்றாச்சு;
மண்ணான ஏழை நெஞ்சம்
பதைக்குதே ஏக்கத்தாலே (தா)
இலைகள், பூ, அசையவும்
பொன்னோசை பிறக்கவும்
கொலைக்குழ லிசையென்று
ஆவிதான் மயங்கவும் (தா)
உடலில் பிரேமை வெப்பம்
கொண்டு குதித்து ஓட
கடலில் கலக்கும் நீர்போல்
காதல் நான் தீர்வதெப்போ? (தா)

(தான்ஸனும் அவனுடைய சாரங்கியை எடுத்துக்கொண்டு அவனுக்குப் பின்னால் ஒருவனும் வருகிறார்கள். தான்ஸன் தயங்கித்தயங்கி நடந்துவருகிறான்)

தான்ஸன்—மஹாராஜ்! கேட்கிறதா கீதம்? தங்கள் நெஞ்சம் தங்கள் வசமிருக்கிறதா?

(அக்பர் ஆடிவழிந்து கண்களை மூடிக் கொண்டவண்ணம் பதில் சொல்லவில்லை.)

தான்ஸன்—மஹாராஜ்!

அக்பர்—(திடுக்கிட்டு) நண்பா! மஹாராஜ்—என்று அழைக்காதே இங்கே. என் வேஷம் ஞாபக மிருக்கட்டும்.

தான்ஸன்—அவருடைய குரலைப் பார்த்தீரா? கிருஷ்ண பரவசத்தில் உருகி ஓடும் உள்ளமல்லவா இன்ப ஒலியாய் மலர்கிறது! ஆ!

அக்பர்—நண்பா! இங்கே பார். இந்த ஊன் வீட்டிலிருக்கும் குருட்டுக் குளவிகூட ஆண்டவனின் இன்பவெளியில் சிறகு விரித்துவிட்டதே. என்ன மஹத்வம் உந்தன் குருவுடையது!

(இருவர்களும் ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் சமீபத்தில் வருவதற்குள் பாட்டு நின்று போய் விடுகிறது.)

அக்பர்—என்ன துர்பாக்கியம் நமக்கு!

தான்ஸன்—ஆம், முற்றிலும் உண்மை. நாம் கதறினாலும் அவர் நமக்காக மறுபடி பாடமாட்டாரே. இனி ஒரு மணி நேரம் அப்படியே அழும் குழந்தைபோல், மழைக்கால மேகம் போல், அவர் நெஞ்சில் சோகம் குமுறுமே விம்மல் பாட்டை தடை செய்யுமே.

அக்பர்—என்ன செய்வோம்?

தான்ஸன்—அவரை வந்தனம் செய்வோம். பிறகு ஆண்டவன் அருள்.

(இருவரும் சுவாமிகளின் முன்னால் வந்து வந்தனம் செய்கிறார்கள். சுவாமிகள் கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்தவர்போல் தான்ஸனைப் பார்க்கிறார்.

ஹரிதாஸ்—அப்பா! இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?

தான்ஸன்—தங்கள் தரிசனத்திற்காகத்தான்.

ஹரிதாஸ்—மடப் பையா! என்னை என்னடா பார்வை? நீலமேக சியாமளனைப் பாரடா......அதோ......அதோ பார்! சந்திரனென்னும் ஒளி மலையினின்று நீல ஜல ஆகாயத்தில் குதிப்பதை.........நீஞ்சுவதை.......அட்டஹாஸம் செய்வதை......அதோ......இதோ......

(அப்படியே லயித்துப்போகிறார்.)

(தான்ஸனும் அக்பரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள்.)

அக்பர்—இது உன்னால் வந்த பிசகு.

தான்ஸன்—ஆம். இனி என்ன செய்யலாம்? அவர் பிருந்தாவனத்திற்குப் போய்விட்டாரே.

அக்பர்—அவர் பாட்டு இன்னும் கொஞ்சம் கேட்காவிட்டால் ஆசை தீராது.

தான்ஸன்—(தலையைச் சொரிந்து கொண்டு) பின்னொருநாள் பார்த்துக் கொள்வோமே.

அக்பர்—பசி வேளையில் ஒரு கவளம் சாப்பிட்டால் காட்டுத் தீ போல் பசி கோரமாய் கிளம்புவது தெரியுமா? அதைப்போல் இருக்கிறது எனக்கு. மறுபடி பாட்டுக்கேட்காமல் திரும்பிப் போக இயலாது.

தான்ஸன்—(பெருமூச்சுடன்) ஹூம்! பார்ப்போம்...எங்கே அந்த சாரங்கியைக் கொடுங்கள்.

(தான்ஸன் பாடுகிறான்)

ஸ்ரீ ஹரிதாஸ்—(திடுக்கிட்டு கண் விழித்து கோபமாய்) யாரடா அவன் கிருஷ்ணனை சித்திரவதை செய்வது? ....நீயா? பாபி........மஹா பாபி ....சொல்லிக் கொடுத்த வித்தையையெல்லாம்,........

கும்பியில் கொட்டி விட்டாயே....... (அமைதியாய்) ஹே! கிருஷ்ணா! பையனை மன்னித்து விடு. என்னையும் மன்னித்து விடு.

(ஹரிதாஸ் அழுதுகொண்டே பாடுகிறார்.)

(அக்பர் கண்ணில் நீர் வடிகிறது. ஸ்தம்பித்து நிற்கிறார். தான்ஸன் வணக்கமாய் கை கூப்பி யிருக்கிறான்.

ஸ்ரீ ஹரிதாஸ்—அப்பா, தான்ஸன்! அவர் யார்? பக்த லக்ஷணம் பொருந்தி பரவச மடைகிறாரே.

தான்ஸன்—குரு மஹாராஜ்! அவர்தான் டில்லி பாச்சா. மொகலாய ஏக சக்ராதிபத்யத்தின் தலைவர், அக்பர்.

ஸ்ரீ ஹரிதாஸ்—அப்படியா? நான் கேள்விப்பட்டதே இல்லையே.

அக்பர்—நல்ல வேளை!

தான்ஸன்—தங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை.

ஸ்ரீ ஹரிதாஸ்—(சந்தேகத்துடன்) இவர் யாரென்று சொன்னாய்?

தான்ஸன்—ஏக சக்ராதிபதி அக்பர் என்றேன்.

அக்பர்—மஹாராஜ்! தான்ஸன் சொல்வதைக் கேட்க வேண்டாம். நான் ஒரு செறுக்குப் படைத்த மூடன்.

ஸ்ரீ ஹரிதாஸ்—ஆ! உம்முடைய பேச்சு எனக்குப் புரிகிறது. புத்தியுள்ளவன் ஒருவன்தான் உண்டு. செறுக்கில்லாதவன் ஒருவன் தான் உண்டு. அவனை நாங்கள் கிருஷ்ண

னன் என்போம். நீங்கள் ஆண்டவன் என்கிறீர்கள். அவனை உருகிப் புகழ்ந்துப் பாடினுல் கடைத்தேறி விடலாம்.

அக்பர்—தங்கள் அநுக்ரஹம்.

ஸ்ரீ ஹரிதாஸ்—(ஏதோ ஞாபகப் படுத்திக்கொண்டு) பையா! இன்று வரையில் சங்கீதத்தில் பிசகுசெய்யாதவன் இன்று ஏன் செய்தாய்?

தான்ஸன்—மஹாராஜ்! அக்பர் மன்னர் தங்கள் கீதத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் கொண்டார். இங்கு அவரை அழைத்து வந்தேன்.

ஸ்ரீ ஹரிதாஸ்—சரி.

தான்ஸன் — நாங்கள் சமீபத்தில் வந்த பொழுது "தாமதம் ஏனே" பாடி முடிந்து பிரேமை வெள்ளத்தில் மூழ்கி விட்டீர்கள். கால் வயிறு சாப்பிட்டவனுக்கு ஏற்படும் அதிருப்தி அரசனுக்கு ஏற்பட்டது. மறுபடி தங்களை பாடும்படி நான கேட்பது என்று இந்தத் திரிசமம் செய்தேன். மன்னிக்க வேண்டும்.

ஸ்ரீ ஹரிதாஸ் — அட கிருஷ்ணு! திரிசமன் செய்தாலும் கடவுளுக்காக செய்யக் கூடாதா, அப்பா? கேவலம் நரனுக்காகவா செய்யவேண்டும்?

அக்பர்—மன்னிக்கவேண்டும். அந்தப் பாவம் என்னைச் சேரட்டும்(என்று வந்தனம் செய்கிருன்.)

ஸ்ரீ ஹரிதாஸ்—போகட்டும். (மறுபடியும் பாடுகிருர்.)

(அக்பரும் தான்ஸனும் ஸ்வயப் பிரஞ்ஞையை இழந்து போகிறார்கள்.)

காட்சி 3

(அக்பரும் தான்ஸனும் அரண்மனைக்குத் திரும்பிப்போய்க் கொண்டிருக்கும் பாதை)

அக்பர்—நண்பா! நீ கொடுத்து வைத்த மஹராஜன்.

தான்ஸன்—ஏன்?

அக்பர்—ஹரிதாஸரைப் போன்ற குருவை அடைய.

தான்ஸன்—ஆண்டவன் அருள்.

அக்பர்—அது மட்டுமல்ல. வேறு காரணமும் இருக்கிறது. ஒரு பாட்டுப் பாடு சொல்லுகிறேன்.

தான்ஸன்—பிறகு ஆகட்டுமே.

அக்பர் — கூடாது இப்பொழுதே பாடு.

தான்ஸன் — (அதிருப்தியுடன்) பாடத்தான் வேண்டுமோ?....சரி.

(பாடுகிறன்)

(மேலே நடந்து போகிறர்கள்).

அக்பர்—நண்பா! வாஸ்தவமாய் உன் பாட்டு உன்னுடைய குருவின் பாட்டிற்கு ஒருக்கால் அடுத்தபடியே அல்லாது அதற்கு வேறு ஈடில்லை.

தான்ஸன்—அதுவும் அவர் அருள் தான்.

அக்பர்—நண்பா! அவருடைய பாட்டில் மட்டும் ஏன் அவ்வளவு இன்ப சோகமும் பூர்ண சுயேச்சையும் ததும்புகிறது?

தான்ஸன் — (வணக்கத்துடன்) எனக்குத் தெரியாது, மஹாராஜ்.

அக்பர் — (அவநம்பிக்கையுடன்) முகத்தைப் பார்த்தால் நீர் ஏதோ மறைப்பதாகத் தெரிகிறது. காரணத்தைச் சொல்லிவிடும்.

தான்ஸன்—அதைச் சொல்லக் கூடாது. வேண்டாம்.

அக்பர்—ஏனே?

தான்ஸன் — வீண் மனஸ்தாபம் வரும். வற்புறுத்தவேண்டாம்.

அக்பர்—யாருக்குள்?

தான்ஸன்—நமக்குள்ளே. அதனுல் தான் வேண்டாமென்று சொல்லுகிறேன்.

அக்பர்—சும்மா வரட்டும். வெறும் சொற்களை, உண்மையான சொற்களைக் கூடத்தாங்காத நமது நட்பு ஒரு நட்பா? உள்ளிப் பூண்டின் தோலைப்போல் நட்பு இருப்பதைவிட அது இல்லாமலிருப்பது மேல். சும்மா சொல்லு.

தான்ஸன்—மஹாராஜ்!

அக்பர்—இனி உமக்கு நான் மஹராஜனல்ல தெரிந்ததா?

தான்ஸன்—

(ஒது நிமிஷம் அக்பர் முகந்தைக் குறிப்பாய்ப் பார்க்கிறன்).

சரி, பாய்! என் குருநாதர், கிருஷ்ணனைத் தவிர வேறு எவருக்கும் எவ்வித சேவையும் செய்வதில்லை. மனிதனை நம்பி அவர் வாழவில்லை. ஆகையால்தான் முக்தனுடைய இரண்டற்ற ஆனந்தமும், சுயேச்சையும், ஒளியும் அவர் பாட்டின் உயிர்ச் சத்தும் உணர்ச்சித் தியுமாகி நிற்கின்றன. அவர் யாருக்கும் ஜவாப் சொல்லத் தேவையில்லை யல்லவா? சித்தம் போக்கு சிவம் போக்கு.

அக்பர்—ஆனுல் நீரோ?

[தான்ஸன் மௌனமாய் நிற்கிறன்.

அக்பர்—ஓ! அப்படியா விஷயம்?... அரண்மனைக்கு நீர் தினந்தோறும் வரவேண்டிய கடமையை இன்றுடன் ரத்து செய்துவிட்டேன். உம்முடைய இஷ்டப்படி வரலாம், வராமலிருக்கலாம். உம்முடைய கீதம் கேட்க எனக்கு ஆசை உண்டாகும்போது நானே வந்துவிடுகிறேன். தெய்வீக கீதம் பிறப்பதற்குப் பூர்ண சுயேச்சையும் தேவை யென்று இதுவரையில் அறியாத அக்பரை ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்வாமிகள் மன்னிக்கட்டும். நண்பரே! நீரும் இனி ஸ்ரீ ஹரிதாஸர் போலாகி விடுவீர். இதுவரையில் கவி உள்ளத்தை விலங்கிட்டு ஒடுக்கிய குற்றத்திற்காக என்னை மன்னிப்பீரா?

தான்ஸன்—நண்பரே! அது வெகு பெரிய பேச்சு. மன்னிக்கும் தொழில் கடவுளுடையது. என் குருபோன்ற உண்மை பக்தர்களுடையது. பிரேமா பக்தியை போற்றுவோம். அது நமது உள்ளத்தில் பிறக்கட்டும்.

(தான்ஸன் பாடுகிறன்)

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்
ஆங்கிலோ-பர்மா பின்மென்
இடம்: 41, பிராட்வே.

4-C, சல்லிபன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர்.
சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் விலை உயர்ந்த உடைகளை ஜலத்தில் இடாமல் பெட்ரோலில் செய்து தரவேண்டுமா? சாயம் அதுகளின் நிலைமை மாறுமலும் சாயம் போட்டுத் தரவேண்டுமானுல், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளை அனுப்புங்கள்.
☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவசச் சலவை.

"ஏதாவது செய்!"

(ஆயில்யம் எழுதியது)

'இதைச் செய்யவா, அதைச் செய்யவா?' என்று ஒருவரை நாம் கேட்கின்றோம். 'ஏதாவது செய்யேன்!' என்று வெகு பசந்தாக அவர் பதில் சொல்லி விடுகின்றார். இந்த அழகான பதிலை எதிர் பார்த்தா நாம் அவரைக் கேட்டோம்? சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்து எடுக்கின்ற சிரமத்தை விட, இரண்டு கால், இரண்டு கை, தலையில் மூளை சகிதம் எதிரே ஒரு ஜீவாத்மா உட்கார்ந்திருக்கிறதே அது கொஞ்சம் நன்றாய்ப் பதில் தராதா என்ற நினைப்போடுதான் நாம் கேட்டது. ஆனால் அந்த ஜீவாத்மாவோ தட்டிக் கழித்து விட்டது. கேள்விக்கு முன்னால் நாம் எந்த ஸ்திதியி லிருந்தோமோ அந்த ஸ்திதியிலேயே நம்மை அழுந்த உட்காரவைத்து ஆணி அடித்து விடுகிறது. இந்த ஆளைக் கேட்பதை விட ஜடவஸ்துவான ஒரு காலணாக் காசை எடுத்து பூவுக்கு ஒரு விஷயத்தையும் தலைக்கு ஒரு விஷயத்தையும் நிர்ணயித்துக்கொண்டு சுழற்றி விட்டால் அந்த ஜடவஸ்து குறிப்பாக, 'இதைச் செய்!' என்று கட்டளையிட்டு விடுமல்லவா? ஆறறிவுடைய எதிரேயுள்ள ஜீவனுக்கு அந்த நிர்தாரண புத்தி யில்லையே யென்று நாம் ஏங்குகின்ற சமயங்களும் உண்டு. "ஏதாவது செய்யேன்!" என்று பதில் தருவது சரியானதா?

ஆனால் எல்லாக் காசும் 'பூவா தலையா' ஆட்டத்தில் தகுந்த விடை தந்து விடுகின்றனவா? அது தான் இல்லை. 1835-ஆம் ஆண்டில் தயாராகி கோடிக் கணக்கான பேர் கையாண்டு தேய்ந்து போன காசொன்றிருக்கிறது. அதைக் கவனிக்காது சுழற்றி விட்டு அது என்ன விடை தருகிறதென்று கவனிப்போமானால் விடை தகராறாய்த் தானிருக்கும். அது பூவா, தலையா என்பது சந்தேகமா யிருக்கும். அந்த தேசக் காசுக்கு சமானமாகவே நம்முடைய நண்பரையும் நினைக்க வேண்டும். 'ஏதாவது செய்!' என்று பதில் தருபவரை என்னென்று சொல்வது?

எதைச் செய்வது என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்படுகின்றது சகஜம் தான். பி. ஏ. பாஸ் கொடுத்தாகி விட்டது. இனி 'பி. எல்'க்குப் படிப்பதா? அல்லது 'லாயர்கள்' விலை போகாத சரக்குகளாக இருப்பதால் இப்போதே ஏதாவது உத்யோகம் தேடிக் கொள்வதா? இத்தகைய சந்தேகம் அநேகருக்கு ஏற்பட் டிருப்பதுண்டு. கொஞ்சம் உலக அனுபவம் பெற்றவராயிற்றே என்று ஒரு பெரியவரைப் போய்க் கேட்டால் "ஏதாவது செய்!" என்று அவர் சொல்வாரானால் அவரது உலக அநுபவத்தின் பயன் இவ்வளவு தானா என்றே நினைக்க நேரிடும்.

வீட்டில் மனைவிக்கும் தாயாருக்கும் கெடுபிடியான சண்டை. "இந்தச் சனியனை தள்ளி வைத்து விடடா! நான் தங்கம் மாதிரி ஒருத்தியை அடுத்த மாதத்திலேயே உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன்" என்கிறாள் தாயார். "இந்தக் கிழவிக்கு இங்கே என்னவேலை? மூத்தப் பிள்ளை கிட்டேப் போய் இருந்து வாழட்டுமே. மாசத்துக்கு இரண்டோ மூணோ பெத்த கடனுக்கென்று அனுப்பி விடலாம்" என்கிறாள் தாலி கட்டிய மனைவி. இந்த இருவர் சொல்வதில் எதைக் கேட்பது என்பது நிச்சய மேற்படவில்லை. இவ்வளவு நாளாக நெருங்கிப் பழகிய நண்பரொருவரிடம் இரகஸ்யமாக நிலைமையை விளக்கி 'என்ன செய்யலாம்?' என்று கேட்டால் 'ஏதாவது செய்!' என்று அவர் சொல்வாரானால் அப்போது முதலில் ஏற்பட்டிருந்த 'புத்தி சலனம்' இன்னும் அதிகமாய் விடுமல்லவா?

சந்தேகம் ஏற்படும் சமயங்களில் அருகிலிருப்பவரைக் கேட்க வேண்டியது தான். ஆனால் அவர் தேசற்காசு போன்றவரென்றோ அல்லது தட்டிக் கழிப்பவரென்றோ தோன்றி விட்டால் உடனே நமக்கு நாமே முடிவு செய்துக் கொள்வதுதான் சரியானது. அவிழ்த்து அவிழ்த்து முடிந்தாலும் அரைக்காசு ரூபாயாகாது. நொடியில் நிச்சயமான தீர்மானத்துக்கு வரவேண்டும்—அடுத்த நொடியில் தீர்மானத்துக் கேற்ற செய்கையி லிறங்கவேண்டும். எப்போதும் சமுசயத்திலேயே இருப்பவன் உருப்படுவதில்லை. 'ஸம்சயாத்மா விநச்யதி!' என்பது ஓர் வடமொழிப் பழமொழி. "எப்போதும் ஐயத்திலிருப்பதை விட தப்பு செய்துவிடுவதே மேலானது" என்று ஓர் ஆங்கிலப் பழமொழியுளது. 'எதைச் செய்ய, எதைச் செய்ய!' என்று பிறரைக் கேட்டுக் கொண்டோ, அல்லது மனதைக் குடைந்து கொண்டோ இருந்தால் பலன் யாதும் விளையப் போவதில்லை.

தூரத்தில் பீரங்கிகள் சப்தித்துக் கொண்டிருந்தன. எதிரிகளின் படைகள் கோலாகலமாக இருப்பதாகக் கேள்விப்பட்டு விட்டான் நப்போலியன். அது தான் வாடர்லூ யுத்த களம்! "எதிரிகளோடு சமாதானம் செய்து கொள்வோமே இந்தத் தடவை!' என்று துக்குறி போல ஒரு தளகர்த்தன் நப்போலியனுக்கு யோசனை சொல்ல முன் வந்தான். சமாதானமா, சண்டையா வென்று நப்போலியன் தர்க்கித்துக் கொண்டிருந்தானா? இல்லை. "படை முன்னேறிச் செல்லட்டும்!" என்று நொடிப் பொழுதில் உத்தரவு கொடுத்து விட்டான். வாடர்லூ யுத்தம் பிரமாதமாக நடந்தது. நப்போலியன் தோற்று விட்டான். கைதியாகி விட்டான். ஆனாலென்ன? அவ்வாறு சீக்கிர தீர்மானத்துக்கு வராமல் எதைச் செய்வது எதைச் செய்வது என்று ஒவ்வொரு தளகர்த்தனையும் கேட்டுக் கொண்டே யிருந்தால் "ஏதாவது செய்யுங்கள்" என்றுதான் பலர் பதில் சொல்லி யிருக்கக்கூடும். ஆனால் நேரம் நஷ்டமாகிவிடும். எதிரிகள்தான் அப்போதும் ஜெயமடைந் திருப்பார்கள். தோற்றுப்போனவனே யாயினும் நப்போலியனின் பெயர் அவனுடைய சீக்ர தீர்மான புத்திக்காக இன்னமும் உலகில் புகழோடு இருந்து வருகிறது.

"எதை எழுதுவது! என்று பேனாவைப் பற்களால் கடித்துக்கொண்டே உட்கார்ந் திருந்தேன்" என்று ஐயாயிரத்துச் சொச்சம் ஆசிரியர்கள் தங்கள் கட்டுரைகளை ஆரம்பிக்கின்றனர். 'எது முதலில் தோன்றிற்றோ அதையே எழுதுங்களேன்!' என்று ஒரு பிரசித்திபெற்ற ஆசிரியர் இன்னொருவருக்குச் சொன்னதை இங்கு ஞாபகப் படுத்தலாமல்லவா!

பதிவிரதை

(ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எழுதியது)

இந்தக் காலத்தில் பல பொய்கள் இடறிப் போகின்றன. பல பழைய கொள்கைகள் தவிடு பொடியாகச் சிதறுகின்றன. பல அநியாயக்காரர்கள் பாதாளத்தில் விழுகிறார்கள்.

இந்தக் காலத்தில் நாம் யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக்கூடாது. பத்திரிகைகள்தான் இப்பொழுது உண்மை சொல்லச் சரியான கருவி. பத்திராதிபர்கள் இந்தக் காலத்தில் உண்மைக்குப் புகலிடமாக விளங்குகிறார்கள்.

ஒவ்வொருவன் எண்ணமும்

ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்னவென்றால் ஆண் பிள்ளைகள் யோக்கியர்களில்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி மக்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டும் என்பதில் எத்தனை ஆவலோடிருக்கிறானோ, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதிவிரத்யத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக்குறையத் தன் இனத்து ஸ்திரீகளைப் பதிவிரதையென்று நம்புகிறான்.

ஆணும் பெண்ணும் ஒன்றாக் கொன்று உண்மையாக இருந்தால் நன்மை உண்டாகும். பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு. ஸாவித்ரி தனது கணவனை யமன் கையிலிருந்து மீட்ட கதையில் உண்மைப் பொருள் பொதிந்திருக்கிறது.

ஆனால் பதிவிரதையில்லை என்பதற்காக ஒரு ஸ்திரீயை வதைத்து இம்சை பண்ணி, அடித்து, ஜாதியை விட்டுத் தள்ளி, ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வு படுத்தி, அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயத்திலும் அநியாயம்.

ஓர் கணக்கு

அட பரம மூடர்களா! ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதையாக இருக்க முடியும்? கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லட்சம் ஜனங்கள்; ஐம்பதினாயிரம் பேர் ஆண்கள்; ஐம்பதினாயிரம் பேர் பெண்கள்; அதில் நாற்பத்தையாயிரம் பேர் பரஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அதிலிருந்து குறைந்த பக்ஷம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பர புருஷரின் இச்சைக் கிடமாகவேண்டும். இந்தக் கூட்டத்தில் நாற்பதினாயிரம் புருஷர் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம். எனவே குறைந்த பட்சம் இருபதினாயிரம் ஸ்திரீகள் வியபிசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது. அந்த இருபதினாயிரம் வியபிசாரிகளில் நூறு பேர்கள் தான் தள்ளப்படுகிறார்கள். மற்றவர்கள் புருஷருடன் வாழ்கிறார்கள். ஆனால் அவளவளுடைய புருஷனுக்கு மாத்திரம் வியபிசாரி யென்பது நிச்சயமாகத் தெரியாது. தெரிந்தும் பாதகமில்லை யென்று சும்மா யிருப்பாரும் உளர்.

ஆகவே பெரும்பாலோர் வியபிசாரிகளுடனே தான் வாழ்கிறார்கள். இதனிடையே பதிவிரத்யத்தைக் காப்பாற்றும் பொருட்டாக ஸ்திரீகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும் கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வருகின்றன.

'என்னிடம் பிரியமாயிரு'

அதென்னடா அது? "என்மேல் நீ ஏன் விருப்பம் செலுத்தவில்லை" என்று ஸ்திரீயை அடிப்பதற்கு அர்த்தமென்ன? இதைப்போல் மூடத்தனம் மூன்று லோகங்களிலும் வேறே கிடையாது.

ஒரு வஸ்து நம்முடைய கண்ணுக்கு இன்பமாக இருந்தால், அதனிடத்தில் நமக்கு விருப்பம் இயற்கையிலேயே உண்டாகிறது. கிளியைப் பார்த்தால் மனிதர் அழகென்று நினைக்கிறார்கள். தவளை அழகில்லை யென்று மனிதர்கள் நினைக்கிறார்கள். இதற்காகத் தவளைகள் மனிதரை அடித்தும் திட்டியும் சிறையிலே போட்டும் துன்பப் படுத்த அவற்றிற்கு வலிமை யிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படி அவை செய்தால் நாம் நியாயம் என்று சொல்வோமா?

சில தேசங்களில் அன்னியர் வந்து கொடுங்கோல் அரசு செலுத்துகின்றார்கள். அவர்களிடம் அந்த ஜனங்கள் ராஜ பக்தி செலுத்தவேண்டுமென்றும், அங்ஙனம் பக்தி செய்யா விட்டால், சிறைச்சாலையிலேயே போடுவோம் என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ராஜ்யத்தை உலகத்து நீதிமான்கள் மிகவும் அவமதிக்கிறார்கள்.

அந்த அரசு போலவே தான் ஸ்திரீகள் மீது புருஷர் செய்யும் கட்டாய ஆட்சியும் என்பது யாவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கும். கட்டாயப் படுத்தி "என்னிடம் அன்பு செய்" என்று சொல்வது பெரிய அவமான மல்லவா?

ஸ்திரீகள் புருஷரிடம் அன்புடன் இருக்க வேண்டினால், புருஷர் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப் பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும் குருவாயினும் புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நீசத்தனம் ருஜுவாகுமே யொழிய, அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமை போலவே நடித்தாலும், உள்ளே துரோகத்தை வைத்துக்கொண்டு தானிருக்கும். அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

பெண்களின் தயாளுத்வம்

ஸ்திரீகள் மனுஷ்ய ஆத்மா இல்லாதவர்கள் என்ற நினைப்பு ஆண்களுக் கில்லாவிடினும், ஆண்களில் பெரும்பாலோர் ஸ்திரீகளை மிருகங்களைப் போலத் தான் நடத்துகிறார்கள். இதை ஸ்திரீகள் தயாள குணத்தால் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அறியாமல் ஸ்திரீகள் சரீர பலக் குறைவால் பொறுத்துக் கொண்டிருப்பதாகப் பல மூடப் புருஷர்கள் நினைக்கிறார்கள். சரீர பலம் குறைந்தாலும், ஸ்திரீகள் சோற்றிலே விஷத்தைக் கலந்துப் போடக் கூடாதா? ஏன் போடவில்லை? சரீர பலக் குறைவினாலன்று ;—தயாள குணத்தால்.

ஸ்திரீகளுக்கு தயாள குணம் அதிகம். அவர்களாலே தான் மனுஷ்ய நாகரிகம் உற்பத்தியாயிற்று. அவர்களிடம் ஆண் மக்கள் நன்றி கெட்ட விதமாக நடந்து கொண்டு வருகிறார்கள். இதனால் உலகத்தில் கலியை அழிப்பது சிரம மாகின்றது. பெண்ணுக்கு ஆண் செய்யும் அநியாயமே முதல் அநியாயம். இதை ஒழித்த பிறகு தான் கலியுகம் போய்க் கிருத யுகம் பிறக்க ஹேது உண்டாகும்.

விலை அணு இரண்டே! முந்துங்கள்!!

ஸ்ரீமான் S. G. கிட்டப்பாவின் சரித்திரம்

காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திரம் வெளி வந்துவிட்டது. 53 பக்கங்களும் 5 அழகிய படங்களையும் உடையது. ஸ்ரீ கிட்டப்பாவினிடம் நெருங்கிப் பழகிய தேசபக்தர் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியரால் எழுதப் பெற்றது.

சங்கு ஏஜண்டுகளுக்கு வியாபாரத்திற்காக ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். மாதிரிக் காப்பிக்கு 3 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ஆக்கூர், அனந்தாச்சாரி,
ஆரிமுத்து ஆசாரி மேஸ்திரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ் : நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் வருஷ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்தத் தொகை ரூ.8,13,60,271

மொத்த ஐவேஜிகள்	....	ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள்	....	ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மை பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.

ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்."
362, சைனு பஜார் ரோட்,
எஸ்பிளனேட், மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைசிங் செக்ரடரி,
171, புதுத் தெரு,
மதுரை.

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	....	0	0	6
ஹரிஜனத் தொண்டு	....	0	0	6
ஹரிஜனப் பணி	....	0	0	6
ஹரிஜன விமோசனம்	....	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணு 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

சில விஷயங்கள் (சிட்டி எழுதியது)

இந்தமாதிரி தலைப்பு போடுவதில் ஒரு சௌகரியம். கட்டுரையில் என்ன வேண்டுமானாலும் எழுதலாம். தலைப்புக்கும் கட்டுரைக்கும் சம்பந்தமில்லை என்று நீங்கள் சொல்லமுடியாது. சொன்னாலும் நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. ஆகையால் இம்மாதிரி ஏமாற்றும் விஷயங்களைப் பற்றிப் படிக்க உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் வேறு கட்டுரையைப் படிக்கலாம். அப்புறம் புகார் செய்யவேண்டாம். (இந்தக் கட்டுரையை ஏன் பிரசுரிக்க வேண்டுமென்று அதிபர் இப்பொழுது யோசிப்பது இயற்கைதான்.)

உலகத்தில் எத்தனையோ விஷயங்களிருக்கும்போது, சில விஷயங்களைப் பற்றி மாத்திரம் எழுதப் புகுந்தது மனதில் ஒன்றும் தோன்றாததால்தான். ஏதாவது எழுதலாமென்று புறப்பட்டால் பேனா படம் போடுகிறதே ஒழிய விஷயம் ஒன்றும் வருவதில்லை. "மூளையிலேதாவது இருந்தா லல்லவோ."

"பேனாவை நேராய் வைத்து எழுதேண்டா" என்று என் நண்பன் கோபத்தோடு உமுறுகின்றான். எப்படி வைத்துக் கொண்டால்தான் என்ன. கட்டுரையைக் காணோம். பேனா பிடிக்கும் விதத்தில் நண்பனுக்குச் சிரத்தை ஏற்பட்டதற்குக் காரணம் பேனா அவனுடையது. ஒருவேளை என்னுடைய பேனாவைக் கொண்டு எழுதினால் வருமோ என்னவோ? ஆனால் ஒரு சிறு கஷ்டம். என் பேனாவில் 'முனை' மாத்திரம் உடைந்துவிட்டது. இத்தனை நாள் பல பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள் திரும்பி வருவதையும் கருதாது மீண்டும் எழுதிக்கொண்டிருந்த எனக்கு இன்று மாத்திரம் ஒன்றும் வாராமற் போனது பெரிய சந்தேகமாயிருக்கிறது.

ஒருவேளை எனக்கு "மெனிங்கிடிஸ்" வந்து விட்டதோ என்னமோ? இது பத்திரிகையின் பெயரல்ல. நோயுலகத்தில் சமீபத்தில் தோன்றிய புது மாதிரியான வியாதி. இதற்கும் மூளைக்கும் அதிக பாந்தவ்யம் உண்டாம். எப்படியாவது கட்டுரை எழுதி விடுவதென்று தலைகீழாய் நின்றேன். ஒருவேளை அப்படி நின்றதினால் ரத்தம் எல்லாம் மூளையில் போய் சேர்ந்து மூளைக் கொதிப்பு வந்துவிட்டதோவென்று சந்தேகிக்கிறேன். "மெனிங்கிடிஸ்" என்ற பெயரைக் கேட்டாலே பயமாயிருக்கிறது.

"இந்த மாதிரி ஏண்டா வீணா பயப்படறே. மூளை யிருப்பவர்களுக்குத்தான் மெனிங்கிடிஸ் வரும். உன் கிட்டே ஏன் வரது." என்கிறான் நண்பன். இவனுடைய பொறுமையைப் பார்த்தீர்களா? இருக்கட்டும் இதை எழுதி முடித்துவிட்டு இந்தப் பேனாவை.. அட இழவே! பேனாவில் மை யில்லை போலிருக்கே..........................இல்லை. இருக்கு. இல்—அதாவது இருக்கு என்று சொல்கிறேன். உதறினால் விழுகிறது.

இந்தப் பேனா லக்ஷணத்திற்கு நேராக வேறு பிடித்து எழுதவேண்டுமாம். பேனா முனையைப் பார்க்கும்போதே மண் வெட்டி மாதிரி இருக்கிறது. அந்தப் பயல் காதிலே விழுந்துவிடப் போகிறது. வேறு விஷயத்தைப் பற்றிப் பேசுவோம்.

கட்டுரை எழுதக் கஷ்டப்பட்டது இது முதல் தடவையல்ல, மூன்று நாட்களுக்குமுன் ஒரு பத்திராதிபர் "தமிழ் மொழியின் தற்கால நிலை" என்பதைப்பற்றி ஒரு வியாசம் எழுதச் சொன்னார். சாப்பிட்டுவிட்டு ஒரு தஸ்தா காகிதங்களை மேஜையின்மீது வைத்துக்கொண்டு நன்றாகச் சீவிய பென்சிலை எடுத்து கொட்டை எழுத்துக்களில் தலைப்பை எழுதி அடிக்கோடு போட்டேன். ஒன்றரை மணி நேரம் ஆயிற்று. பென்சில் ஓடவில்லை. கோபத்தில் அதை எறிந்துவிட்டு பேனாவை எடுத்தேன். பதினேழு தடவை "தமிழ் மொழியின் தற்கால நிலை" என்று எழுதினேன்.

காக்காய்த் தலை வைத்து ஒரு யானையும் மனிதக் கால்களுடன் ஒரு மாட்டையும் வரைந்தேன். குறுக்கும் நெடுக்குமாகப் பல முறைஎன் பெயரை எழுதினேன். அதன் பின் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தாலும் தெரியாத சில உருவங்களைக் கிறுக்கினேன். பின்னால் யாரோ மூச்சுவிடும் சத்தம் கேட்டது, திரும்பிப் பார்த்தேன்; என் நண்பன்.

"ஓஹோ! தமிழ் மொழியின் தற்கால நிலை இப்படியா யிருக்கிறது. சித்திரக் கலை அதிகம் வளர்ந்துவிட்டது போலிருக்கிறதே!" என்றான் காயிதத்தைப் பார்த்துக்கொண்டே.

நான் கட்டுரை எழுத முடியாமற் போனதிலிருந்தே தமிழின் நிலை பத்திராதிபருக்கு ஒருவாறு தெரிந்துவிட்டது.

தலைப்பைப் பற்றி எழுதப் போவதில்லை என்றல்லவா நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். இருக்கட்டும். நீங்கள் ஏமாற முடியாமல் செய்து விடுகிறேன். சில விஷயங்கள். ஆம். நம்மை யாராவது பார்த்து "ஏன் சார்! உங்க 'பிரதர்' வீட்டில் இருக்கிறாரோ? அவரோடு சில விஷயங்கள் பேசவேண்டும்" என்று சொல்லும்போதே நமக்குக் காபுராதான். எங்கே நாம் பீச்சில் சிகரெட்டு புகைத்துக்கொண்டிருந்ததைச் சொல்லி விடுகிறார்களோ என்று "பிரதர்" வீட்டிலில்லை என்று சொல்லி விடுகிறோம். "சில விஷயங்கள்" என்ற பதத் தொடருக்கு இவ்வளவு அதிகாரம் இருக்கிறது. ஒரு வேளை இந்த நினைவுதான் இக்கட்டுரை படிக்க வாரம்பிக்கும்போதே உங்களைத் தடுத்ததோ?

"இன்று மாலை திருவாளர்................ அவர்கள் கர்ப்பத்தடை சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றி பேசுவார்" என்ற செய்தியைப் படிக்கும்போது சில சந்தேகங்கள் தோன்றுகின்றன. ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசும்போது அதில் சில விஷயங்கள் எப்படி வரும். உதாரணமாகக் கட்டுரையை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு கட்டுரையும் ஒரு விஷயத்தைப் பற்றித்தானே இருக்கும். அப்படி யிருக்க ஒரே கட்டுரையில் சில விஷயங்களெப்படி யிருக்கும்? இம்மாதிரி தலைப்புப் போடுவதே தவறல்லவா? இதற்காகத் தான் தலைப்புக்கும் கட்டுரைக்கும் சம்பந்த மிருக்காது என்று சொன்னேன். நீங்கள் நம்பவில்லை. சொல்வதைக் கேட்காமல் முழுவதும் படித்து விட்டு என் மேல் குற்றம் சொல்வதில் பயனில்லை. போனது போகட்டும். நமது வாழ்க்கையில் அதி முக்கியமான வேறு சில விஷயங்களைப் பற்றி கவனிப்போம்.



ஓர் பறவையின் சிந்தனை

முட்டைக் கரு

முற்றுங் கருவாகி—ஒரு சிறு
முட்டையில் வாழ்கையிலே
சுற்று முலகெனக்கு—உருண்ட
தோடா யிருந்ததம்மா. [வெண்

கூட்டிற் குஞ்சு

குஞ்சுப் பருவத்திலே—பிறிதொரு
கூட்டிலிருகையிலே
விஞ்சு முலகினையான்—உயர்ந்த புல்
வீடாகக் கண்டேனம்மா.

சிறகு முளைக்கும் சிறு பறவை

இறகு முளைக்கையிலே—பறந்திட
யானும் பழகையிலே
நிறையு முலகெனக்குத்-தழைகொடி
நேரிட மானதம்மா.

பறக்கும் பெரும் பறவை

நீண்ட வெளிவரவே—உயர்ந்தவிண்
நீலந் தெரிந்ததம்மா
ஆண்டவனன்றி எவர்—உலகை
அறிந்திட வல்லா ரம்மா.

—தேசிக விநாயகன்.

காலக் கண்ணாடி

(பரத்வாஜன் எழுதியது.)

உத்தராயண புண்ய காலம் நடக்கின்றது. வைகுண்டம், சிவலோகம் போகிறவர்களெல்லாம் இனிமேல் நல்ல வழியில் போகலாம்—ஸ்வர்க்க வாசலுக்கு நேர்வழி. உமர் கய்யம் சொல்வதுபோல இடம் காலியானல் வேறு ஆடவேண்டிய ஆசாமிகள் சீட்டைக் கையில் பிடிக்கலாம்.

ப்ரஹ்மசாரி 'கோர்ட்' திறந்து நடக்கிறது. ஜவுளிக்கடை, புஷ்பக்கடை, பாத்திரக் கடை—ஏன், வியாபாரத்திற்கே புதுப் பேரேடு; பெண் பெற்றவர்களுக்கு புது வரியேடு. பெண்களை வளர்த்து வைத்துக்கொண்டு இரவும் பகலும் ஸமூகத்தின் வாய்க்குப் பயந்து கொண்டிருந்தவர்களில் சிலர் கொஞ்சம் மூச்சு விடுகிறார்கள்.

நாடகக் கொட்டகைகளும் சினிமா தியேட்டர்களும் நிறைவது குறையாவிட்டாலும் எங்கு பார்த்தாலும் பண நெருக்கடி என்கிறார்கள். (அரிசி யென்னமோ ரூபாய்க்கு 6½ படி விற்கிறது) ஜனங்களுக்கு உத்ஸாஹமில்லை.

நிலத்தை வாங்குவோரில்லை. தங்கத்தை வாங்குகிறார்கள். ஆனல் தங்கம் விளைகிறதில்லையே! நெல்கூட விளைகிறதில்லை. இந்த வருஷம் நெல் மண்தான். மிராசுதார்களின் வில் வண்டிகளும், மயிலை ஜோடிகளும், இருந்த இடம் தெரியவில்லை. உழுகிற குடியானவன் வாரத்திலும் மண்ணைப்போட்டு விடுகிறான். ஆனல் ஒரே ஒரு தேறுதல். நல்ல வேளையாய் இப்பொழுது தமிழ் நாட்டில் பத்திரிகைகள் நெல்லுக்குப் பதிலாக கதிர் வாங்குகின்றன. வயிற்றுக்கு சோறில்லாவிட்டாலும் ஈரத்துணியை இருகச் சுற்றிக்கொண்டு கட்டுரை எழுதி மகிழலாம்—வழி நடந்து போவதற்கு பிரயாணிகள் கதை பேசுவது போல,

இந்த மாதம் முதல் தேதிதான் அய்யர்வாள் பிறந்த நாளாம். ராத்திரி ஒரு மணிக்கு மூச்சுப் பெற்று, நிசியின் நிச்சப்தத்தில் குரலைக் கிளப்பினார். இது 32-வது வயது. இவ்வளவு வருஷம் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு எந்த விஷயத்தையும் அவர் சாதிக்கவில்லை. 'சிவனே' என்று தாலூக்காக் கச்சேரியில் மாதம் ஐம்பது ரூபாய்க்கு உயிர் உதிரத்தை கொஞ்சம் கொஞ்சமாக விக்கிரயம் செய்து, காபி சாப்பிட்டுக் காலம் கழிக்கிறார்.

32-வது வயதில் ஆதி சங்கரர் அத்வைத ஸ்தாபனம் செய்துவிட்டார். 32 வயதில் ஷெல்லி அமானுஷமான காவியங்களை எழுதிவிட்டான். 32 வயதில் நெப்போலியன்—அடுக்கியென்ன பயன். ஆதி முதல் ஒரு லக்ஷ்யமில்லாமல் ஜீவனம் பாழடைந்துவிட்டது. ஒரு புறு, பருந்துக்குக் கூட 'முழுகி'ப் பறக்கவேண்டு மென்கிற லக்ஷிய மிருக்கிறது போலத் தெரிகிறது. உள்ளுள்ள அக்னியை எந்தக் கையும் விசிறி, மூட்டி ஜ்வாலையாக்கவில்லை. இருபது வயது வரையில்தான் அய்யா சௌக்யமாக வளர்த்தார். பிறகாவது தேசீயப் புயலடித்தபோது அதில் போய் ஈடுபட்டு அதில் சுழன்று ஓர் செத்தையா யிருக்கலாமே? இல்லை. பி.ஏ. பாஸ் செய்து பிறகு முன்னோர்கள் கட்டிவைத்த வீட்டில் சுகமாக 4 வருஷங்கள் தொலைந்தன. அப்பொழுது ஆங்கில இலக்கியப் பேய் பிடித்திருந்தது. மாமனார் உத்தியோக நுகத்தடியைத் தூக்கிக் கழுத்தில் வைத்தார். அந்தப் புண்ணியம் அவருடையது.

சிந்திப்போன பாலுக்கு இப்பொழுதென்ன செய்வது? ஒன்றும் மோசம் போகவில்லை. பருவ காலத்தில் பாம்புச் சட்டையை உரித்தெறிந்து வெளிக் கிளம்புவது போல, பாய்ந்தெழுந்து பொதுஜன வேலையில் ஈடுபடலாகாதா? தரித்திரமும் சோம்பரும் பரஸ்பர சிருஷ்டிகள். சோம்பரை மறந்தால் தரித்திர நிலையே தோன்றுதென்பார்கள். இந்தியாவில் இப்போது பரம ஏழை சந்யாசி யார்? அவர்தான் காந்தி. அவரிடம் ஏழ்மைத்தனம், சோம்பேரித்தனம் இரண்டும் காணப்படுவதே யில்லை. எப்பொழும் தேச சேவையே லட்சியமாகக் கொண்டிருக்கிறார். அவர் கிழிக்கும் எல்லாக் கோடுகளையும் தாண்டமுடியாவிட்டாலும் ஒரளவாவது தாண்டுவதற்கு முயன்றோமானல் தரித்திர நிலையை நமது ஞாபகத்தினின்று மறைவதற்கு இடமுண்டு. தரித்திர நோயைத் தீர்க்கும் 'சேவை' என்ற மருந்தை நமது அய்யர் உட்கொள்ளலாகாதா?

நட்பு

தமிழ்நாட்டின் சரித்திரக் கதை

(கம்பதாஸன் எழுதியது)

‘அள்ளிக் கொளலாய் அடையத் திரண்டொன்ருய் கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள்.’ அன்றைக்கு வானத்திலும் நட்சத்திரங்களதிகமில்லே. சோலேகளில் மினிமினிப் பூச்சிகள் மட்டும் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. கிடங்கனூரில் பெண்மணிகள் யாரும் அன்றைய இரவு கண்மூடவில்லே. அவர்களுக்குத் தூக்கம் வருமா? பாண்டியன் சோழ நாட்டின்மீது படையெடுத்து வந்து விட்டானும். ஆகவே பெற்றெடுத்த பாலரையும், கைப்பிடித்த கணவரையும் போர்க் களத்துக்கு அனுப்பியிருந்த அப்பெண்டீருக்குத் தூக்கம் எங்கிருந்து வரும்? ‘அங்குயிரும் இங்குடலும் ஆனதொரு கால’மாக அன்று ஸ்திரீகள்இருந்தனர். கிடங்கன் பெருமாள் முதலியார் மட்டும் போருக்குச் செல்லவில்லே. கரூர் சண்டையில் ஏற்பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லேயே. அவரால் எப்படி வாள் எடுக்கமுடியும்? அவர் படுக்கையில் படுத்திருந்தார். அவருடைய பேரன் வீரநாராயணன் அவரருகே நின்று கொண்டிருந்தான். வயது பத்துதான் இருக்கலாம். ‘தன் மண் காக்கவோ பிறர் மண் கொள்ளவோ’ வெளியே புறப்பட அவனுக்கின்னும் வயதாகவில்லே. ஆனல் ‘போர்’ என்ருல் என்னவென்பது அந்தச் சிறுவனின் கற்பனேயில் நன்ருய்ப் பட்டிருந்தது.

“ஏன் தாத்தா? மகாராஜாவைத் தானே அவுங்க சண்டைக் கிழுப்பாக! சின்ன துரையைக்கூடப் பிடிச்சுக்கு வாங்களோ?” என்று கேட்டான் வீர நாராயணன்.

“சண்டையிலே எது என்ன வாகுமோ, யாரால் சொல்லமுடியும்? எதிரிகள் ராஜாவை மட்டுமா எதிர்த்து வருகிருர்கள்? இளேய ராஜா மட்டும் அகப்பட்டுக்கொண்டால் எதிரிகளுக்குக் கொம்மாளம்தான். துரையை தியாகராஜஸ்வாமிதான் காப்பாத்த வேணும்” என்ருர் படுக்கையி லிருந்தவர்.

இளேய ராஜாவான—அதாவது சின்ன துரை என்று நாராயணனல் அழைக்கப்பட்டவன்—ஜயவீரச் சோழனும் வீரநாராயணனும் ஒரே சிலம்பக் கூடத்தில் பயிற்சி பெற்றவர்கள். நாராயணன் ஒரு படையாச்சியின் மகன். ஜயவீரன் சோழ அரசனின் குமாரன். ‘சிலம்பக் கூடத்தின் நட்பு ஜென்மத்துக்கு மிருக்கும்’ என்பார்கள். கத்தி சுற்றுதல் வேலெறிதல் இவைகளில் நாராயணன் திறமைசாலியா யிருந்தால் அரசன் மகன் குதிரை யேறுவதிலும், மற்போரிலும் மிக்க கெட்டிக்காரனு யிருந்தான். சோழ தேசத்தையும், தன் தோழனின் குடும்பத்தையும் காப்பதற்காக ரணகளத்துக்குப் போகவேண்டுமென்று நாராயணனுக்கு ஆசைதான். ஆனல் மீசை அரும்பாத பையனேப் படையில் சேர்ப்பார்களா? சமாசாரமாவது அறிந்து வரலாமென்ருலோ பாட்டனரைப் படுக்கையில் விட்டுவிட்டு எப்படி வெளியே போவது? சாயங்காலத்தில் கொல்லேயிலிருந்த தன் முப்பாட்டனின் வீரக்கல் முன்னே வணங்கித் தன் நண்பன் ஜயவீரச் சோழன் காக்கப்பட வேண்டுமென தெய்வத்தை வேண்டிக் கொள்வதோடு நாராயணன் நட்பு நிற்கவேண்டியதாயிற்று.

அர்த்த ராத்திரி வேளேயில் எங்கும் நிச்சப்தமாயிருந்த சமயத்தில் யாரோ மெதுவாக வாசற் கதவைத் தட்டுவது போலிருந்தது. தூக்கம் பிடிக்காத நாராயணன் படுக்கையிலிருந்து துள்ளியெழுந்து “யார் அது?” என்று கேட்டான். “நான்தான் வீரா! கதவைத் திற” என்று பதில் வந்தது. அது சின்னதுரையின் குரல். குண்டோட்டமாய் ஓடிப்போய்க் கதவைத் திறந்தான். வந்திருந்த குதிரையை வாசற் தூணில் கட்டிவிட்டு ஜயவீரன் முதலியார் படுத்திருந்த அறையை நோக்கி ஓடினன்.

கோழிக் கனவு கண்டுகொண்டிருந்த முதலியார் கண்ணே விழித்து, “இளேய ராஜா வரவேணும்! என்ன இந்த நேரத்திலே! உட்காருங்கள்” என்று குழறிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தார். “மாமா! நான் உட்காருவதற்கில்லே. பாண்டிய வீரர் பன்னண்டு பேர் துரத்திக்கொண்டு வருகின்ரனர். நான் இன்றைக்கே சோழ மாளிகைக்குப் போய்விட வேண்டுமென்பது தண்ட நாயக்கர் உத்தரவு. நான் தொலே தூரம் போகும் வரை இந்தப் பன்னிரண்டு ஆளேயும் இங்கேயே தாமதிக்கச் செய்வீர்களா?” என்று கேட்டான் இளவரசன்.

“கட்டாயம் செய்கிறேன். கொல்லேயிலே நமது சின்னக் குதிரை இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு தைரியமாய் போய் வாருங்க! இருட்டு” என்ருர் அந்தப் பெரியவர்.

“போயிட்டு வரேன் மாமா!” என்று கூறிய பின்பு நண்பன் வீரநாராயணன் தோள்மீது ஓர் ‘சொப்பை’ தட்டிக் கொண்டு கொல்லேப்புறம் நோக்கிப் போனன் ராஜ குமாரன்.

* * *

அரை நாழிகையாயிற்று. ஊர் முழுதும் கலகலவென்று பேச்சாயிருந்தது. யாரோ பதினேந்து-இருபது பாண்டிய ஆட்கள் ஊருக்குள் புகுந்திருக்கிருர்களென்ற விஷயம் ஒவ்வொரு வீட்டுக்கும் தெரிந்து போகவே அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைப் பல முறைகளில் ஊரார் பேசிக்கொண்டிருந்தனர். வந்த அன்னியர்கள் நேரே முதலியார் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினர். கதவு திறப்பாரில்லே. எவ்வளவு நேரம் காக்க முடியும்? கதவைத் தகர்த்துக் கீழே தள்ளிவிட்டு சொந்த வீட்டைவிட அதிக பாத்யதை போல எண்ணிக்கொண்டே உள்ளே சென்றனர்.

உள்ளே முதலியார் கட்டிலிற் படுத்திருப்பதைக் கண்டனர்.

“ஏ கிழவா! இங்கே சின்னராஜா வந்தாரா சொல்லு!”

முதலியார் ஏதும் பதில் சொல்லவில்லே.

அதட்டிக் கேட்டுப் பார்த்தார்கள். அந்தவழியும் பலிக்கவில்லே.

“ஏ! இந்தக் கிழவன் பலே யாளு!

அந்த ராஜா வீட்டு மகன் இங்கிட்டுத்தான் ஒளிஞ்சுக்கிட்டு இருப்பான். அது நிச்சயம். வாசல்ல இரண்டு பேர் கொல்லையிலே இரண்டு பேர் நில்லுங்க. நாங்க இங்கே அறை அறையாய்த் தேடிப் பாக்கிறோம்" என்றார் வந்தவர்களுள் கிருதா மீசைக்காரர்.

பிறகு சோதனைக்கு ஆரம்பித்தனர். "ஆ! இதோ! இங்கே!" என்று கதறிக்கொண்டு ஓர் வீரன் விழுந்த சத்தம் கேட்டு அனைவரும் தாழ்வாரத்து அறையை நோக்கி ஓடினர். அங்கு வலமும் இடமுமாக ஓர் கத்தி வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. அனைவரும் சேர்ந்து அக் குமாரனைத் தாக்கத் தொடங்கினர். எட்டுக் கத்திகளுக்கு முன்னே இளைஞன் என்ன செய்ய முடியும்? பாரதத்திலே அபிமன்யுவை மோசடியாகக் கொன்றார்களென்று சொல்கிறார்களல்லவா, அந்த மாதிரி இந்த பாலனை யாரோ ஒருவன் பின்னாலிருந்து தாக்கினான்.

'அம்மா!' என்று கத்திக் கொண்டே அந்தப் பாலன் விழுந்தான்.

அந்தச் சமயத்தில் கையில் ஒரு வேலையெடுத்துக்கொண்டு தட்டுத் தடுமாறி நடந்து வந்துகொண்டிருந்தார் முதலியார்.

"ஏ கிழவா! நீ அப்போதே சொல்லியிருந்தா உங்க ராசா மகன் செத்திருக்க மாட்டானே. இதோ பாரு இப்படி ராசாப் பிள்ளையேச் சாவவிட்டுட்டேயே!" என்று கூறிக்கொண்டு கிழவனை நோக்கி யுத்த சன்னத்தராக பாய்ந்தனர்.

"போங்கடா அறதப் பயல்களே! செத்துப்போனது யாருன்னு நினைச்சுக்கிட்டீக. ராஜ குமாரனுக்கு உயிர்ப்பிச்சை தந்த ரத்தினமடா அது" என்று கண்ணீர் வடித்துக் கொண்டே கிழவன் சவத்தண்டை வந்தான். கையிலிருந்த வேல் நழுவிக் கீழே விழுந்தது.

"மகனே! எந்தத் தடவை யுத்தத்தில் நான் என்னுடைய பங்கு ஊழியம் செய்யக் கொடுத்து வைக்கவில்லையே யென்று துடித்தேன். என் குலம் விளக்க வந்த கொம்பு நீ. உன் ரத்தத்தைக் கொடுத்து என் கடனைத் தீர்த்தாயடா என் செல்வமே! இனி எனக்கு இந்த உயிர் எதற்கு" என்று கதறிக்கொண்டு குழந்தையின் சவத்தின்மேல் சாய்ந்தார்.

ரஷியாவில் விபசாரத் தொழில்

"அங்கு நிகழ்ந்த சமூகப் புரட்சியின் பயனாக, அங்கு ஆண்களுக்கும் பெண்களுக்கு மிடையிலுள்ள உறவிலும் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. விபசாரத் தொழில் ரொம்பக் குறைந்து போய்விட்டது, விவாகச் சட்டங்களில் ஏற்பட்ட மாறுதல்கள், பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம், ஆகியவை போன்ற காரணங்களால் அங்கு அது வெகுதூரம் குறைந்துவிட்டது" என்று "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையில் ரஷியாவில் விபசாரத் தொழிலைப்பற்றிய ஒரு குறிப்பு காணப்படுகிறது.

ஸோவியத் ஆட்சி என்னென்ன முறைகளைக் கையாண்டு, வெற்றிகரமாக அந்த ஆபாசத்தை ஒழிக்க முயலுகிறது என்பதை அந்த நிருபர் விளக்கியிருக்கிறார். அவர் மேலும் எழுதுகிறார்:

"நாட்டுப் புறங்களிலிருந்து விபசாரத்தி லீடுபட்ட யுவதிகளை மாஸ்கோவுக்கு அழைத்துச் செல்லுகின்றனர். அங்கு அவர்களுக்கு ஏதாவது ஒரு தொழிலோ, அல்லது வியாபாரமோ கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதைக் கற்ற பின்னர், அந்த யுவதிகள் மறுபடி விபசாரத்தில் இறங்குவதே இல்லை.

ஸோவியத் புரட்சிக்குமுன் மாஸ்கோவில் 18 லட்சம் ஜனத்தொகை. அதே சமயம் சுமார் 30 ஆயிரம் விபசாரிகளிருந்தனர். 1928ம் வருஷத்தில் ஜனத்தொகை 25 லட்சம். விபசாரிகள் மூவாயிரந்தான். ஆனலிப்பொழுது விபசாரிகளின் தொகை 500 ஆக குறைந்து போயிருக்கிறது.

இதற்குக் காரணமென்ன? அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. முன்பு சொன்ன பல காரணங்களாலும், ஐந்து வருஷத் திட்டம் போன்ற விஷயங்களில் ஜனங்களின் கவனம் திருப்பிவிட்டதாலும், கருக் கலைத்தல் சட்ட சம்மதமானதாகச் செய்யப்பட்டுவிட்டதாலுமே இது சாத்தியமாயிற்று அந்த நாட்டின் இலக்கியங்களிலும், ஸினிமாக்களிலும் 'லிங்க' உணர்ச்சியேயில்லாதபடி செய்துவிட்டனர். அதனால் ஜனங்களின் மனமும் வெகுதூரம் சுத்தமாகி யிருக்கிறது.

பெரும்பாலும் விபசாரிகள் தாமாகவே சீர்திருத்த ஸ்தாபனங்களுக்கு வந்து சேருகின்றனர். சிறுபான்மையோரைக் கண்டுபிடித்து அழைத்து வரக் "கிளர்ச்சிச் சங்கங்கள்" பல ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு ஆண்பிள்ளை விபசாரத்திற்காக ஒரு பெண்ணை அழைத்தால், அவனுடைய விலாசச் சீட்டில் அது அச்சடிக்கப்பட்டு விடும். மறுபடி அவன் அதே குற்றம் செயது தண்டனை யடைந்தால், அவன் வேலை செய்யும் தொழிற்சாலைச் சுவற்றில் ஒட்டப்படும் விளம்பரத்தில் அந்த விஷயம் கொட்டை யெழுத்தில் எழுதப்பட்டிருக்கும். ரஷியாவில் ஒருவன் இந்த மாதிரித் தன் பெயர் அடிபடுவதைவிடச் சிறைக்குச் செல்வதே மேல் என எண்ணுவான்.

ஸோவியத் ஆட்சியில், கருக்குலைக்கும் சட்டம் ஒரு முக்கியமான அம்சம். ஏற்கனவே உள்ள குழந்தைகளின் மிகுதி, வாழ்க்கையில் உள்ள பணக் கஷ்டம், வேலை செய்ய ஏற்படும் இடைஞ்சல், புருஷன் பட்டாளத்தில் சேர்ந்திருப்பது ஆகிய நியாயமான காரணம் ஏதாவது காட்டினால்தான் ஒருத்தி தனது கர்ப்பத்தைக் கலைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவாள். அதிலும்கூட அந்த மனுவை விசாரிக்கும் பஞ்சாயத்தாரின் தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது. அந்தக் கருவிலிருக்கும் குழந்தை பிறந்தால் அது எவ்விதக் கஷ்டமுமின்றிப் பூரண வளர்ச்சி பெறுவது சாத்தியமா என்பதையே அவர்கள் முக்கியமாகக் கவனிப்பார்கள்.

இவைகள் தவிர, சிசு சம்ரக்ஷண ஸ்தாபனங்களின் வேலையு மிருக்கிறது. தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தாய்மார்களையும் குழந்தைகளையும் கவனித்து உதவி செய்யத் திறமையான வைத்திய ஸ்தாபனங்களிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனுடைய குடும்ப ஆரோக்கியம் தெரிய வேண்டுமானால் ஐந்தே நிமிஷங்களில் கிடைக்கும். அம்மாதிரியான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய வைத்திய ஸ்தாபனங்கள் ஜில்லாவாரியாக அமைக்கப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் அத்தகைய பனிரெண்டு ஸ்தாபனங்களிருக்கின்றன.

சுவரொட்டிகள் யுத்தம்!

கத்தியில்லே. இரத்தமில்லே. ஆனல் பாரிஸ் நகரில் இப்போது பிரமாதமான 'யுத்தம்' ஒன்று நடக்கிறது. சுவரொட்டி விளம்பரங்கள்தான் அந்த யுத்தத்தில் உபயோகிக்கப்படும் பாணங்கள். இந்த விளம்பர யுத்தத்தை டைம் அண்டு டைடு பத்திரிகையின் நிருபர் எழுதி யிருக்கின்ருர். அவரோடு நாமும் பாரிஸ் நகருக்குள் சென்று பார்ப்போமே!

* * *

தெருக்களில் எந்தெந்த வீட்டின் சுவற்றிலெல்லாம் இடமிருக்கிறதோ அங்கே ஒரு விளம்பரம் காணப்படுகிறது. ஹோட்டல் சுவர்கள், ஷாப்பு வாசலிலுள்ள கண்ணுடி ஜன்னல்கள் எல்லாம் விளம்பரங்கள்! சிவப்பு, பசை, நீலம், மஞ்சள், வெள்ளை, எல்லா வர்ணங்களிலும் விளம்பரங்கள் காட்சி யளிக்கின்றன.

அதோ தெரிகிறதே அதுதான் பௌல்வார் செயிண்டு மிச்செல் என்னும் தோட்ட மைதானம். அங்கே ஒரு கூட்டம் கூடி நிற்கிறது. அதோ தெரிகிறது! ஒரு பெரிய விளம்பரம். ஜனங்கள் உற்சாகத்துடன் படிக்கிருர்கள்.

"ஜனநாயகத்திற்கு ஆபத்து" என்பது விளம்பரத்தின் தலைப்பில் கொட்டை யெழுத்தில் போட்டிருக்கிறது. கீழே பழைய ஜனநாயகத் தலைவர்களான தலாதீர், சூடேம்ப்ஸ் முதலியவர்கள் உள்ளிட்ட 214 கையெழுத்துக்களிருக்கின்றன. விளம்பரம் என்ன சொல்லுகிறது? பிரெஞ்சு அரசாங்கம் திருத்தி ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று கூறி ஸ்டாவிஸ்கி மோசடியைப் பற்றி விசாரிப்பதென்ற பொய் முகாந்திரத்தை வைத்துக்கொண்டு, சில துரோகிகள் ஜனநாயக உரிமைகளைக் குலைக்க முயலுகிருர்கள். நாம் அதைப் பொறுத்துக் கொண்டிருக்கக்கூடாது" என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது.

அதோ! அதற்கடுத்தாற் போலுள்ள மஞ்சளில் கருப்பு மையால் அச்சடிக்கப்பட்ட விளம்பரம். அது முந்திய விளம்பரத்தை வெளியிட்டவர்களை "ரௌடிகள்," என்று சொல்லுகிறது.

ஒவ்வொரு விளம்பரத்திற்கு முன்னும் ஒரு கூட்டம். சற்று நேரத்திற்கு ஒருதரம் ஒரு போலீஸ்காரன் வருகிருன். உடனே கூட்டம் கலைகிறது. பின்னலேயே இன்னெரு கூட்டத்திற்கு ஆள்கள் எங்கேயாவது காத்திருந்தார்களோ என்னும்படி மறுபடியும் கூட்டம் கூடிவிடுகிறது.

அதோ இரண்டு யுவர்கள் அந்த விளம்பரத்தைக் கிழிக்கிருர்கள். அதைக் கையால் கிழிக்க முடியவில்லை. அதில் எழுதி யிருப்பதைக் காணச் சகிக்கவில்லை யவர்களுக்கு. உடனே இரண்டு பேனுக்கத்திகள் வெளிவருகின்றன. விளம்பரம் காற்றில் பறக்கிறது.

ராணுவத்தினன் போல உடை யுடுத்தவன் ஒருவன் வந்து அவர்களைத் தடுக்கிருன். யுவர்கள் அவனிடம் முறைக்கிருர்கள். இப்பொழுது ராணுவ உடை தரித்தவர்கள் நாலைந்து பேர்களாகி விட்டார்கள். யுவர்களிருவரும் சாக்கடையில் புரளுகிருர்கள்!

சுற்றி நின்ற கூட்டம் கோஷம் செய்கிறது. யுவர்கள் எழுந்து வெட்கத்துடன் வெளியே போகிருர்கள். பின்னல் கூட்டத்திலிருந்து ஒருவன், "ராஜீய விஷயங்களைப்பற்றிக் கொஞ்சம் கற்றுக்கொண்டு வந்திருக்கக் கூடாதா? இதை ஒட்டுவதற்காக நான் பட்டபாடு ஆண்டவனுக்குத் தெரியும். சின்னப் பயல்கள் கிழித்து விளையாடுவதற்கல்ல நான் ஒட்டினது" என்று கத்துகிருன்.

இன்னும் எவ்வளவோ விளம்பரங்கள். அந்தச் சண்டையைப் பார்த்து விட்டுத் திரும்பினல் தெருக்கோடியில் ஒரு விளம்பரம் காணப்படுகிறது. இங்கே வேண்டிய அளவு ஹாஸ்ய ரஸமனுபவிக்கலாம். அதில் என்ன எழுதி யிருக்கிறது? "பிரான்ஸு தேசத்தை ஆளும் உரிமையுடைய ஒருவன் (பழைய ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன்) இருக்கிருன். அவனைக் கண்டுபிடித்தாகி விட்டது. ஆகையால் பிரான்ஸில் ஜனநாயகம் ஒழிக! முடியரசு ஏற்படுக" என்று தான் எழுதி யிருக்கிறது.

அடுத்த தெரு. வேருெரு விளம்பரம். அங்கும் ஒரு கூட்டம் நிற்கிறது. ஒருவன் சொல்லுகிருன். "அடே! இதுதான் தேசீய அபேத வாதம். அது தான் குதிரைக்கு முன்னல் வண்டியை வைக்கிறது" என்ருன்.

பக்கத்திலிருப்பவன் அவன் தலையில் தட்டிவிட்டு "போடா மடையா! குதிரை யல்லடா! கழுதைக்கு முன்னல் வண்டி என்று சொல்லு" என்கிருன்.

அடுத்தது ஒரு சிவப்பு விளம்பரம். ரஷியாவி லிருந்து துரத்தப்பட்டுள்ள திரோத்ஸ்கியின் தூண்டுதலின் மேல் தயாரான அந்த விளம்பரம் சமத்துவ வாதம் போதிக்கிற தென்று சிலர் கூட்டத்தில் பேசிக் கொள்ளுகிருர்கள்.

இன்னெரு விளம்பரம் ரொம்ப மர்மமாக விருக்கிறது. காவல்களிலே நடுவில் வருமே "சுரங்கத்திற்கு மர்ம வழிக் குறிப்பு." அதுபோல அது "மூன்ருவது படை"யில் சேரும்படி ஜனங்களை யழைக்கிறது. அது என்ன படையோ தெய்வத்திற்குத்தான் வெளிச்சம்.

* * *

பாரிஸிலுள்ள சுவர்களெல்லாம் யுத்த களங்களாக விருக்கின்றன. நூறு ஆயிரம் என்று விளம்பரங்கள் வெளியாகிக்கொண் டிருக்கின்றன. பழைய கட்சிகள், இதுவரை பெயரே கேள்விப்படாத புதிய கட்சிகள் ஆக எத்தனையோ டஜன் கணக்கில் கட்சிகளின் பெயர்கள் அடிபடுகின்றன.

ஒவ்வொரு விளம்பரத்திலும் முக்கியமாக ஒரு வரி யிருக்கிறது. 'யோக்கியனை பிரஞ்சுக்காரன்" அந்த விளம்பரத்திலுள்ளதை ஆதரிப்பானென்று ஒவ்வொரு விளம்பரமும் சொல்கிறது. அந்த விளம்பரத்தை ஒட்டினவருடைய அபிப்பிராயத்தை ஆதரிப்பவன்தான் "யோக்கியனை பிரெஞ்சுக்காரன்" என்பதுதான் இதில் விசேஷம்.

இந்த விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டே சொல்லும் பிரஞ்சு நிதி யிலாகா மந்திரி உள்ளூரப் புன்னகை புரிகிருர். என் தெரியுமா?

ஒவ்வொரு விளம்பரத்திற்கும், ஒட்டிப் பிரசாரம் செய்வதற்காக சர்க்காருக்கு 25 சென்டைம்ஸ் வரி கட்ட வேண்டும். இந்த வருஷம் இந்த இனத்தில் 83-4 லட்சம் பிராங்கு வருமானம் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

அதனல்தான் புதிய தலைவர் கொஞ்சங்கூட அசைபவே யில்லை. அவர் போட்டிருக்கும் உத்திரவு என்ன தெரியுமா? "யார் வந்து 25 சென்டைம் கட்டினலும் ஒரு விளம்பரம் ஒட்ட அனுமதியுண்டு" என்பதுதான். அவர்கள் என்ன வேண்டுமானலும் எழுதி ஒட்டிக் கொள்ளட்டுமே!

ஸூபி ஸாதியின் திருவாக்குகள்

[ஸூபி ஸாதி என்பவர் ஒரு சிறந்த பாரசீகக் கவி. இவர், "குலிஸ்தான்" என்னும் சுவையுள்ள பாமாலையைத் தொடுத்திருக்கிறார். தனது நீண்ட வாழ்க்கை யனுபவங்களையே இப்பாமாலையிற் பாடியுள்ளார். இவர் நூற்றுப் பத்து ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். திருக்குரானை நன்கு ஆராய்ந்து, அதன் வழி நின்று, தன் வாழ்வைத் தூய்மைப் படுத்திக்கொண்டார். இவருடைய தூய மனத்தினின்று, "குலிஸ்தான்" (ரோஜா வனம்) என்னும் அருமையான, என்றும் வாடாத பூக்கள் பூத்தன. குலிஸ்தானின் உயர்ந்த கருத்துகள், படிப்பார் மனதைப் பரிசுத்தமாகும். அவை, ஒருவன் வாழ்க்கையையே சீர்திருத்தும் தன்மையன; கேட்போருக்கு அறிவு கொளுத்துவன; பேரின்பந் தருவன. இக்கவி, குலிஸ்தானை உலகிற்கீந்து, 1292-ம் வருஷம் ஆண்டவன் திருவடியை யடைந்தார். —சுத்தானந்த பாரதியார்.]

1. ஒரு மத யானையை யெதிர்த்துப் போர் புரியும், வீரனைக் காட்டிலும் தன்னைப் பிறர் கடுத்தாலும், அவர்மேல் வெகுளாது நிதானமாகப் பேசுவோனையே உண்மை வீரனாகப் பெரியோர் மதிப்பர்.

2. மிருகங்களிற் சிங்கத்தை உயர்வென்றும், கழுதையை இழிவென்றும் கூறுகிறார்கள். ஆள் விழுங்கும் சிங்கத்தினும், சாந்தமாகப் பொதி சுமக்கும் கழுதையே மேன்மை யென்பது அறிவினர் முடிவு.

3. ஒரு சிறு பாயில் பத்துத் துறவினர்கள் சாந்தமாகப் படுத்துக் கொள்வார்கள். ஆனால் ஒரு பெரிய நாட்டில் இரண்டு மன்னர்கள் சமாதானமாக இருக்க முடியாது.

4. கொடுங்கோலன் ஒரு சமூகத்தாரை ஆளவே முடியாது. ஏனெனில் ஒரு ஓநாய் ஆட்டிடையன் வேலையைப் பார்க்க இயற்கையில் ஏற்பட்டதில்லை. ஒரு கொடுங்கோல் மன்னன் தன் ராஜ்யத்தின் அரணைத் தானே யிடிக்கிறான்.

5. ஆத்ம சுயேச்சை யடைந்தவனிடம் பணமும், காதலர் மனதில் பொறுமையும், மடவாயில் தண்ணீரும் நிலைக்காவாம்.

6. பகலில் தீவட்டி போடுவோன் இரவில் எண்ணை இல்லாது விழிப்பான்.

7. சந்நியாஸ மென்பது காவியுடையில்லை; அது உள்ளத் துறவிலும் எளிமையிலும் இருக்கிறது. ஒரு வீரனே வீர வுடைகளை அணியத் தக்கவன். ஒரு பயங்காளி அதற்குத் தக்கவனாகானன்றோ?

8. சூரியனுடைய அழகையும், ஒளியையும் நலத்தையும் கண்டும் பொதுவாய் ஜனங்கள் ஆர்வமுறுவதில்லை. ஏனெனில் அவன் வழக்கமாகத் தினந்தோறும் வருகிறானன்றோ?

9. கல்வி பரவுதற்கு வித்வான்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடு. துறவு நிலைக்க வேண்டுமானால் சந்நியாஸிக்கு ஒரு காசு கூடக் கொடுக்காதே.

10. நீ தூசியாகு முன் தூசி போலத் தாழ்மையுடனிரு.

11. சுதந்திரத்தின் சக்தி கொடுங்கோலினும் வலியது.

12. ஏ பணக்காரர்களே! உங்களுக்கு நியாய உணர்ச்சியும், எங்களுக்குத் திருப்தியும் ஏற்பட்டால், உலகின் துயர்கள் நீங்கும்.

13. ஓ திருப்தியே! நீயின்றி ஒருவரும் செல்வனாக முடியாது. பொறுமையின்றி யாரே ஞானியாக முடியும்?

14. நமது தேவைகளைப் பிறரிடம் சொல்லி யாசிப்பதினும், இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வது நலம். பணக்காரனிடம் ஒரு புத்துடைக்காகக் கெஞ்சுவதினும், தனது கந்தையைத் தைத்துடுத்துவதே சிறந்தது. இரப்பதினும் பட்டினியோடிருப்பது மேல்.

15. பாரசீகத்தில் அகப்படும் கந்தகத்தை சீன தேசத்திற்கும், சீனத்து மண்பாண்டத்தை கிரேக்க நாட்டிற்கும், கிரேக்கின் பண்டங்களை இந்தியாவிற்கும், இந்தியாவில் மிகுந்த எஃகை அலப்போவிற்கும். அலப்போவிலிருக்கும் கண்ணாடியை யாமினுக்கும் நான் கொண்டுபோய் வியாபாரம் செய்வேன்.

16. என் குற்றங்களையெல்லாம் குணமெனவும் என் குறைகளை யெல்லாம் நிறைகளெனவும் புகழும் நேசரை நான் விரும்பவே யில்லை. அவர்கள் முட்களை ரோஜாக்க ளென்றும் மல்லிகை யென்றும் வர்ணிப்பவர். என் குறைகளை யெல்லாம் இரைந்து கூவும் எதிரி எங்கே? அவனே என் அன்பன்!

17. ஒரு மிருகத்திற்கு நீ பேசக் கற்பிக்கமுடியாது. ஆனால் அதனிடத்தினின்று நீ மௌனத்தைக் கற்றுக் கொள்.

18. எவ்வளவு படித்திருப்பினும் அதன்படி நில்லாதவன் ஒன்றுந் தெரியாதவனே; அப்படிப் பட்டவன் வேதாந்தியுமல்ல, துறவியுமல்ல, புத்தக மூட்டையைச் சுமக்கும் ஒரு மிருகமேயாவான்.

19. ஏ துறவீ! நீ பூமியைப்போல் பொறுமையா யிருக்கப் பழகு. உன் புத்தகப் படிப்பை யெல்லாம் பூமிக்குள் ஆழமாகப் புதைத்து விடு.

20. சுறுசுறுப்பில்லாத பண்டிதன் பணமில்லாத காதலன் போலாவான் அறிவில்லாத பிரயாணி இறகில்லா பட்சி போல்வான். அனுஷ்டான மி[illegible] லாத வேதாந்தி பழமில்லா மரத்தைப் போல்வான்; கல்வி யில்லாத பக்தன் கதவில்லாத வீடு போல்வான்.

21. ஏ கிழவீ! உன் வெளுத்த கூந்தலைக் கறுப்பாக்கினாலும், உன் வளைந்த முதுகை நிமிர்த்த முடியாது.

22. கழுதையை மெக்கா யாத்திரைக்குக் கூட்டிப் போனாலும் அது கழுதையாகவே திரும்பிவரும்.

23. ஒரு வனாந்திரத்தின் மணல் முழுதும் தங்கமும் முத்துமானாலும், ஒரு பேராசை பிடித்தவன் களிப்பது, ஐயமே.

24. வெறுப்போடு பார்க்கும் கண்களுக்கு மன்மதனும் அழகற்றவனாய்த் தோன்றுகிறான். விருப்போடு பார்ப்போனுக்கு அரக்கனும் அழகனாகிறான்.

25. மெதுவாக விடாது நடப்பது, விரைவாக ஓடி மத்தியில் விழுந்து விடுவதினும் மேல். கொஞ்ச தூரம் தாவியோடிக் களைத்துப்போகும் அரபிக் குதிரையினும், சேர்ந்தாற்போல நிதானமாய் நடக்கும் ஒட்டகம் வனாந்திரத்தை எளிதில் தாண்டுகிறது.

26. "ஏழ்மை எனது பெருமை" என்று ரசூல் சொல்வதைக் கவனியுங்கள்!



'பாப்பா' என்றழைக்கப்படும்—

கரூர் வெங்கடராமய்யர்

(ஈ. கிருஷ்ணய்யர் எழுதியது)

அந்நிய தேசத்திலிருந்து வந்து நமது நாட்டில் கையாளப்பட்டுவரும் ஸங்கீத வாத்யங்களில் நமது ஸங்கீதத்துக்குக் கெடுதியாயிருப்பது ஹார்மோனியம். மிகவும் உதவியாயிருப்பது பிடில். இதைத் தென்னிந்தியர்களே முக்கியமாய் ஸ்வீகாரம் செய்துகொண்டு, கர்னாடக ஸங்கீதத்துக்கு இன்றியமையாததோர் பக்க வாத்யமாக அமைத்து விட்டார்கள். எனவே அது அந்நிய தேசக் கருவி என்ற ஞாபகங்கூட வராதவாறு அவ்வளவு பொருத்தமாக நமது ஸங்கீதத்துக்கு ஏற்பட்டுவிட்டது. வீணை, ஸாரங்கி, கோட்டு, முதலிய பூர்வீக இந்தியக் கருவிகளைப் போல் அவ்வளவு இனிய இயற்கை நாதம் இதில் இல்லாவிடினும் நல்ல உதவுபடியுள்ளது. செவ்வையாய் ஸாதகம் செய்யாதவர் கையில் அநேகமாய் அபஸ்வரக் களஞ்சியமாக விளங்கும். ஆனால் நன்கு தேர்ச்சி பெற்றோரிடம் அவர் நினைத்தவாறு பேசும் கருவியாகவே இலங்கும். மந்தரஸ்தாயி தந்திகளில் வாசிக்கும்போது சில தடவை மனித சாரீரமோ, எனத் தோன்றுமாறு நாதமும் காணப்படும்.

இச்சங்கீதக் கருவி தென்னிந்தியாவில் சுமார் 110 வருஷமாக வழங்கி வருவதாகத் தெரிகிறது. பிடில் வடிவேலு ஆதியாக அநேக பெரியோர்கள் இதைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். ச்யாமா சாஸ்திரியின் பேரனான அண்ணாஸாமி சாஸ்திரி, அவர் சிஷ்யர் ரங்காசார்யலு, பிடில் சுப்பராய அய்யர், பிடில் பொன்னுசாமி பிள்ளை, மலையாளம் மஹாதேவய்யர், திருநெல்வேலி வெங்கு பிள்ளை இன்னோரன்ன பெரியோர்கள் மூலம் இவ்வாத்தியம் தழைத்தோங்கியது. திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் கையில் இவ்வாத்தியத்துக்கு விசேஷமான பிரக்யாதியும், பெருமையும் ஏற்பட்டன. அவரது அரிய ஸாதகமும் பெருத்த ஞானமும் அவ்வாத்தியத்தின் மூலம் வெளிக்காட்டப்பட்டன. கரூர் தேவுடுவய்யர் மூலம் இதில் பயிற்சிக்கான முறைகள் ஒழுங்கு படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. இவர்களுக்குப்பின் ஸமீபத்தில் காலஞ்சென்ற திருச்சினாப்பள்ளி கோவிந்தஸாமி பிள்ளையிடம் இவ்வாத்தியத்தில் அதுவரையில்லாததோர் அரிய இனிமையும், அவருக்கென்றே அமைந்ததோர் 'பாணி'யும் காணப்பட்டன. அப்பெரியாரின் சிஷ்யர்தான் கரூர் வெங்கிடராமய்யர். ஸாதாரணமாய் ஸங்கீத உலகத்தில் அவர் 'பாப்பா' என்றே அழைக்கப்படுகிறார். பெயர்தான் 'பாப்பா'வே யன்றி அவருக்கு வயது இப்போது 33 !

பிடில் வித்வான் ஸ்ரீகண்டய்யரின் புதல்வர். கரூர் தேவுடுவய்யர், சின்னஸாமி அய்யர் இவர்களுக்கு உறவினர். எனவே பிடிலைப் பரம்பரையாகப் பழகிவரும் குடும்பத்தில் ஜனித்தவர். ஆரம்பத்தில் தன் தகப்பனாரிடமே 6 வயதிலிருந்து 11 வயதுவரை ஸங்கீதம் கற்றார். மூன்றாவது பாரம் வரை பள்ளிக்கூடத்திலும் கல்வி கற்றிருக்கிறார். அப்பால் கரூர் சின்னஸாமி அய்யரிடம் 1911 முதல் 1917 வருஷம்வரை இந்த வாத்தியத்தில் பயிற்சி பெற்றார். பிறகு 1918 வருஷம் திருச்சி கோவிந்தசாமி பிள்ளையிடம் சிஷ்யராக அன்னார் இறுதிக்காலம்வரை இருந்து தனது வாத்தியத்தில் தேர்ச்சி பெற்றார். அவரிடம் பிடில் பயின்று வரும்போதுதான் முன் கற்றவைகளில் பல முறைகளை மறந்துவிடவேண்டுவது அவசியமாகத் தோன்றியதாம். அந்நாட்களில், தான் தொழிலுக்கு வெளிவந்து வாத்தியம் வாசிக்கக்கூடாது, என்ற கட்டுப்பாட்டுடனேயே அவர் பிள்ளையவர்களிடமிருந்ததாகத் தெரிகிறது. காலஞ்சென்ற பிள்ளையவர்களின் வழியையே இவர் பெரும்பாலும் பின்பற்றி வாசிக்கின்றார் என்பதும் இவர் வாசிக்கும்போது அப்பெரியாரின் ஞாபகம் அடிக்கடி மூட்டப்படுமென்பதும் ஸங்கீத உலகில் யாரும் அறிந்த விஷயங்கள்.

இப்போது பாப்பாவய்யருக்கு வயது 33. வயதில் சிறியரேனும் மெலிந்து உலர்ந்த தேகம். நல்ல நிறம். சிறு

[இந்த வியாசத்தின் உரிமையும் இதற்கு முன் 'சங்கில்' சங்கீத வித்வான்களைப் பற்றி எழுதப்பட்ட இதர வியாசங்களின் உரிமைகளும் ஆசிரியர் ஈ. கிருஷ்ணய்யருடையது. அவர் அனுமதியின்றி இதர பாஷைகளிலும் எவரும் மொழிபெயர்க்கலாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். சங்கு. ப-ர்.]

மீசை. அதிகக் கலகலப்போ அதிக ஒதுக்கமோ இல்லாத ஸ்வபாவம். மொத்தத்தில் மரியாதை, வினயம் இவைகளுடன் ஸ்நேகபாவமு முடையவர். இரண்டு வருஷங்களுக்குமுன்வரை தேக அஸௌக்கியத்தால் அடிக்கடி பீடிக்கப்பட்டு மிகவும் இளைத்திருந்தார். அக்காலங்களில் முன்கோபம் சீக்கிரம் வந்துவிடும் தன்மை சிறிது இருந்ததாகச் சொல்வதுண்டு. இப்போது சரீரம் தேர்ந்து வருவதோடு அத்தன்மையும் அநேகமாய் மறைந்துவிட்டதெனலாம். தற்காலத்தில் ஸங்கீதக் கச்சேரிகளில் யாவரும் விரும்பக்கூடிய பக்கவாத்ய வித்வானுக நல்ல பிராபல்ய மடைந்துவருகிறுர். சென்னையைச் சேர்ந்த மாம்பலத்தில் வசிக்கின்றுர். இப்போதுள்ள பிடில் வித்வான்களில் அழகுள்ள பிரத்யேக 'பாணி'யுடன் வாசிப்பவர் அநேகமாய் அவர் ஒருவரே எனலாம். கேட்டவுடன் ரஸிகருக்குத் தென்படுவது அவரது வாத்யத்தின் இனிய நாதம். இனிமையுடன் பெரிய கூட்டங்களிலும் நன்கு கேட்கக்கூடிய கணிப்பும் கொண்டது.

பிடில் வாத்தியத்தில் இடைவிடாது இனிய நாதத்துடன் வாசிப்பது அவ்வளவு எளிதல்ல. இனிமைக்காகச் சிலர் கணிப்பை அதிகம் கவனியார். எனவே, கணிப்பு இல்லாததாலோ, குறைவா யிருத்தலாலோ, வெகுநாளாகத் தொழிலி லிருந்துவரும் சில பெரிய வித்வான்களின் வாத்யம் கூட இப்போது ரஸிக்க முடியாதிருப்பதை ஸங்கீத அபிமானிகள் அறிவார். இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டதோடு இவரது குருவினிடமிருந்து கற்ற விசேஷமானதோர் வழியும் சேரும்போது இவர் வாசிப்பு திகட்டாத ருசியைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இந்தப் பிரத்தியேக 'பாணி' என்பது விசேஷமாய் அவர் ராகங்கள் வாசிக்கும்போது நன்கு தென்படும். குழைவுகளையும் கமகங்களையும் அதிகமாகக் கொண்டது. கற்பனை விஸ்தாரமாயும் அபரிமிதமாயு மில்லாவிடினும், அவரிடம் காணப்படும் மனோதர்மம் நேர் முறையானதும் போற்றத் தக்கதுமே. கவனிக்கத் தக்கதான சுருதி சுத்தத்துடன், தந்நிச்சயமும், அழுத்தமும் நல்ல மெருகும் கொண்ட ஸங்கீதம். ஸங்கதிகளும் ஸஞ்சாரங்களும் படிப்படியாயும் பொருத்தமாயும் அமைந்து நன்கு நின்று நிலைத்து அனுபவிக்கக் கூடியவை. மொத்தத்தில் பலவித நல்ல அம்சங்கள் சேர்ந்து அழகு படைத்த 'பாணி'. எக்கச்சேரியையும் ரஞ்சிக்க செய்யும் பக்க வாத்யமாகவே அவர் வாசிப்பு இருக்கிறது.

ஓர் தனி 'வழி'யையே பெரிதும் பின்பற்றி யிருப்பதால் பாடகன் பாடுமிடங்களி லெல்லாம் பின் தொடர்ந்து வாசிக்கும் இயல்பு அவரிடமுண்டோ என்று சிறிது ஸந்தேகங் கொள்ளலாம். மிகுந்த வல்லமை வாய்ந்த அவரது குருவான பிள்ளையவர்களிடம் பாடகனைப் பின்பற்றி வாசிக்கும் வழக்கமோ மனப்பான்மையோ அதிகம் இருந்ததில்லையென்பது யாவரும் அறிந்த விஷயம். அக்குணம் 'பாப்பா'விடம் இன்னும் வரவில்லை. கூடியவரை பின்பற்றியும், இடம் கிடைக்கும்போது தனது ஸொந்த வழியைக் கொண்டுமே வாசிக்கிறுர். ஆனுல் மொத்தத்தில் பாடகனை எதிர் பார்த்து நிற்கும் ஸங்கீதமல்ல இவர் வாசிப்பு. பாடகனின் ஸங்கீதம் உயர்ந்ததானுல் இவர் வாத்யமும் அதற்கு இணையாக நின்று கச்சேரியை மேன்மேலும் போஷிக்கும். தன் பாணியையே பெரும்பாலும் கொண்டு வாசிப்பவராதலாலும் அப் 'பாணி' ஏற்கனவே அழகுள்ளதாதலாலும் பாடகனின் ஸங்கீதம் மட்டமாயிருந்தாலும் இவர் வாசிப்புக்குக் குறைவிராது. சிற்சில வேளைகளில் இவரதே முன்தூக்கி விசேஷச் சிறப்புடன் விளங்கும்.

உருப்படிகளும் சுமாராய்ப் பாடமுண்டு. சுருதி சுத்தத்தையும் நல்ல மெருகையும் கவனிக்கிறவராததால் 'வியவகார'ங்களிலும் ஸொப்படு வித்தைகளிலும் நுழைவதில்லை. தனக்குத் தெரிந்ததை விதரணையாய் வெளிக்காட்டும் இயல்புடையவர். தற்காலத்தில் பெரிய கச்சேரிகள் உள்ள இடங்களில் அநேகமாய் பாப்பாவய்யர் பக்கவாத்ய மில்லாதிராது. ஸங்கீத உலகில் அவர் பிடில் வாத்யவாசிப்பில் மோஹமில்லாதாரும் அரிதே.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனுசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

அனாவசியமான தடபுடல்

(திப்புவின் வம்புகள்)

கொஞ்சம் சம்பந்தர் சம்பந்தம் வேண்டாமா? போட்டோவுக்குத் தைலப் பூச்சோடு போக வேண்டுமா? ஒரு மனிதனின் திறமைக்கு மதிப்பா அல்லது இதர அலங்காரங்களுக்கு மதிப்பா? உலக விசித்திரங்களில் சில மாதிரிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

"நான் ஒரு டென்னிஸ் சாம்பியன்..... ஆதலால் உங்கள் ஆபீஸில் குமாஸ்தா உத்யோகம் கிடைக்குமென்று நினைக்கிறேன்" என்று உத்யோக விண்ணப்பங்களில் எழுதுவது ஒரு நாகரிக முறையாயிருக்கிறது. மைதானத்தில் டென்னிஸ் ஆடுவதற்கும் ஆபீஸில் பேனா ஓட்டுவதற்கும் என்ன சம்பந்தமோ அது அந்த விண்ணப்பதாரருக்கும் உத்தியோகந் தருபவருக்கும் தான் தெரியும். "நான் யு. டி. ஸி. யைச் சேர்ந்தவன். நான் ஸ்கௌட் மாஸ்டரா யிருந்தவன்" என்று சொல்லிக் கொள்கிறவர்கள் ஒரு புறமிருக்கட்டும். பாவம், அவர்கள் உத்தியோக வேட்டையிலிருக்கிறார்கள்! தங்கள் பெயரை அலங்கரித்துக் கொள்ள எத்தனை தினுசாய் முடியுமோ அவ்வளவையும் சொல்லித் தொலைக்கிறார்கள்.

ஆனால் உத்யோகங்களை வைத்துக் கொண்டு ஆள் சேர்ப்பவர்கள் சில விளம்பரங்கள் போடுகின்றார்களே அதைப் பார்க்கும்போது தான் சிரிப்பு வருகிறது. 'ஒரு கண்டிராக்டர் தேவை! விண்ணப்பத்தோடு போட்டோ அனுப்ப வேண்டும்' என்று ஒருவர் விளம்பரம் போட்டிருந்தார். கண்டிராக்டர் கருப்பா யிருந்தாலென்ன? சிகப்பா யிருந்தாலென்ன? உயரமா யிருந்தாலோ குட்டையா யிருந்தாலோ கட்டிடம் கட்டி முடியாதா என்ன? போட்டோ எதற்கு? கண்டிராக்டருக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறாரா? ஆளின் உருவம் சில தொழில்களுக்குத் தான் அலங்காரமாகுமே யன்றி எல்லாத் தொழிலுக்கும் அவசிய மென்று கூற முடியாது.

ஸினிமாவில் ஆக்ட் செய்ய ஒருவர் ஆள் சேர்க்கின்றார். 'போட்டோ அனுப்புங்கள்!' என்று அவர் விளம்பரம் போடலாம். பெண்ணின் கல்யாணத்துக்கு வரன் தேடுகின்றார். பையன் கண்ணுக்கு அழகா யிருக்கின்றானா என்று மாமனார் அறிந்து கொள்ள வேண்டியது தான். கம்பெனி கணக்கை ஆடிட் செய்வதற்கு ஒரு ஆள் வேண்டுமென்றால் விண்ணப்பதாரருக்கு மூஞ்சி நெடுக்க இருந்தாலென்ன? குறுக்க இருந்தாலென்ன?

தேவைக்கு அனாவசியமானவைகளைக் கேட்பதும், சொல்வதும், செய்வதும் இந்த தேசத்தில் சர்வ சகஜமாகி வருகிறது. போட்டோ படத்திற்குப் போய் நிற்பவர் 'இக்கோ ஸெண்டு' பூசிக் கொண்டு போய் நிற்க வேண்டாம். வாசனையைப் போட்டோ எடுக்கும் சக்தியுடைய 'காமிரா'வை இன்னும் எவரும் கண்டு பிடித்தாகவில்லை. போட்டோவுக்கு நிற்கப் போகிறவனுக்கு வாசனைத் தையிலப் பூச்சு எதற்கு?

சில நாட்களுக்கு முன்னே நான் கிராமபோன் பிளேட் எடுக்கும் ஒரு இடத்திற்குப் போக நேர்ந்தது. அங்கு யாரோ ஒரு அம்மாள் 'பிளேட்' கொடுத்துக் கொண்டிருந்ததாகச் சொன்னார்கள். மைக்ரோபோனின் முன்னே உட்கார்ந்து கொண்டு அந்த அம்மாள் பாடிக் கொண்டிருந்தபோது கழுத்து நிறைய நிறைய வைர நகைகளை வாரிப் போட்டுக் கொண்டு இருந்தாள். 400 ரூபாய்க்கு குறையாத சரிகை மயமான ஒரு புடவையை அணிந்திருந்தாள். இப்போது அந்த அம்மாளின் பிளேட்டு பிரமாதமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அந்தப் பிளேட்டின் பாட்டினின்று அன்றைக்கு அந்த அம்மாள் எவ்வளவு ரூபாய்க்கு வைர நகை யணிந்திருந்தாளென்றும், என்ன தினுஸு புடவை கட்டிக் கொண்டிருந்தாளென்றும் யாராவது சொல்வீர்களா? அந்த அம்மாள் அன்றைக்குச் செய்து கொண்டு வந்திருந்தது அனாவசியமாக அவஸ்தைப் படுத்தும் அலங்காரமென்று நான் சொன்னால் அன்னார் கோபிக்க மாட்டார்களன்றோ!

அழகான உருவத்துக்கும், விலையுயர்ந்த உடுப்புக்கும் சிற்சில இடங்களில் தான் மதிப்புண்டு. அவசியமுமுண்டு. எல்லாத் துறையிலும் இவைகளைக் கொண்டு உலகை மயக்கலாமென நினைப்பது வீண்தான். 'அப்பால் எவனோ சென்றால் அவன் ஆடையைக் கண்டு பயந்தெழுந்த நின்ற' காலம் மலையேறிப்போய் விட்டது.

இந்த ரீதியிலேயே ஆலோசித்தால் இன்னொரு சம்பவமும் நமது நினைப்பிற்கு வருகிறது. 'சங்கீதம் முழம் என்ன விலை' என்று கேட்கும் ஒரு 'பெரிய' மனிதனை ஒரு சங்கீதக் கச்சேரிக்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்கிறார்கள். அவரை அழைத்ததற்குக் காரணம் அவருடைய பெயரோடு ஓர் ஸர்ரோ, ஒரு திவான் பகதூரோ இருப்பது தான். ஒரு தமிழ்க் கதா பிரசங்கத்துக்கு இந்தியாவுக்குப் புதிதான ஒரு ஆங்கிலேயரைக் கூப்பிட்டு அக்கிராசனம் வகிக்குமாறு செய்கின்றார்கள். சொற்சுவை பொருட்சுவையோடு நமது பாகவதர் பாடும் பாட்டுக்களெல்லாம் 'காடோமோடோ' யென்று அவனுக்குப் படுகின்றன. ஏதோ அவர் ஒரு ஆங்கிலேயர், இந்தியாவை ஆளும் ஜாதியைச் சேர்ந்தவர் என்பது தான் அவரைப் பற்றிய 'அலங்காரம்'. பட்டம் பெற்றவர்களெல்லாரும் ரஸிகர்கள் என்று நினைக்கும் இந்த மூட எண்ணம் இருக்கின்றதே இதற்கு உறைபோட வேண்டுமானால் போட்டோவுக்கு தைலம் பூசிச் செல்பவர் மூளையையும், ரேடியோவில் பாட சிங்காரித்துச் செல்பவர் மூளையையும் தான் தேட வேண்டும்.

அது கீர்த்தி ஸ்தம்பமே!

(குதுப்மினாரைப்பற்றிய ஓர் ஆராய்ச்சி.)

பள்ளிக்கூட சரித்திரப் புத்தகங்களில் எவ்வளவோ அபத்தங்கள் இருக்கின்றன. உதாரணமாக: கல்கத்தாவின் 'இருட்டுக் குகை' என்று ஒரு கட்டம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதே அது வெறும் கற்பனை என்று நிரூபித்தாகி விட்டது. அதே மாதிரி குதுப்மினாரைப் பற்றியும் ஒரு ஆசிரியர் ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கின்றார்.

டெல்லிக்குப் போனால் குதுப்மினார் என்ற அழகான கோபுரத்தைப் பாராமல் யாரும் திரும்பமாட்டார்கள். அந்தக் கோபுரத்தில் நுழைந்தால் 'சுருள்' படிகள் மேலே வழிகாட்டுகின்றன. போகப்போக கோபுரத்தின் பருமன் குறைகின்றது. உச்சாணிக்குப் போய் நின்று கீழே பார்த்தால் எல்லா வஸ்துக்களும் சின்னஞ் சிறியவையாகத் தென்படும். இந்த அழகான கோபுரம் யார் காலத்தில் கட்டப்பட்டது என்ற விஷயம் சரித்திரக்காரர்களுக்கு இன்னும் பிடிபடவில்லை.

பள்ளிக்கூட சரித்திர புத்தகங்களில் இந்த கோபுரத்தை டெல்லிக்கு அரசனாயிருந்த ஸிக்கந்தர் லோடி கட்டினான் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயம் தப்பிதம் என்று நிரூபிக்கின்றார் ராய் பகதூர் குன்வார் ஸேன் என்ற ஆராய்ச்சிக்காரர். பஞ்சாப் சரித்திர ஆராய்ச்சியாளர் சபை முன்னே படிக்கப்பட்ட ஓர் நீண்ட கட்டுரையில் அவரது அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மேற்படி கோபுரத்தில் நுழையுமிடத்தில் 'ஸிக்கந்தர் லோடி' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது மாடியில் பிரோஜ்ஷா டுக்லக் (1351—1388), அலாவுதீன் கில்ஜி (1296—1316), அல்தமாஷ் (1210—1235) என்ற பெயர்களும் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பெயர்கள் எல்லாம் பிற்காலத்தில் செதுக்கப்பட்டன வென்றுதான் கொள்ள வேண்டும். சரித்திரத்தைத் துருவிப் பார்த்தால் இந்த அரசர்களின் காலத்தில் இத்தகைய ஸ்தூபி ஒன்று கட்டப்பட்டதாக ஒரு குறிப்பு கூடக் கிடைக்காதிருக்கின்றது. மேலும் கோபுரத்தில் அடித்தளத்தின் வேலைப்பாடும், அதற்கு மேலேயுள்ள நான்கு மாடிகளின் வேலைப்பாடும் வித்தியாசமாயிருக்கின்றன. ஆகவே யாரோ முதலில் அடிக்கோபுரத்தை ஆரம்பித்திருக்கவேண்டு மென்றும், சிறிது காலங் கழித்தே இதர கோபுரங்கள் கட்டப்பட்டிருக்கவேண்டு மென்றும் ஏற்படுகின்றது. நிற்க,

குதுப்மினாருள் நுழையும் போது இடது பக்கத்துச் சுவற்றில் 'பிரிதி நிருபா' என்று நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பதை அநேக சரித்திர ஆசிரியர்கள் கவனியாது விட்டிருக்கின்றனர். ஆனால் இந்த பிரிதி நிருபன் யார்? அது பிரிதிவி ராஜனா (1175) இருக்க முடியாது. ஏனெனில் பிரிதிவி ராஜனின் சபையில் 'சந்திரபர்தாய்' என்று ஒரு கவி யிருந்தான். அவன் தனது அரசனின் கீர்த்திப் பிரதாபங்களைப்பற்றி காவியம் ஒன்று எழுதி யிருக்கின்றான். அந்தக் காவியத்தில் இத்தகைய கோபுர நிர்மாணத்தைப்பற்றிப் பேச்சே யில்லை. அந்தக் கவியின் காலத்தில் இது கட்டப்பட்டிருக்குமானால் அதைப்பற்றி பிரஸ்தாபிக்காது அவன் போயிருப்பானா?

ஆனால் அந்தப் பிரிதி நிருபன்தான் யார்? ராய் பகதூர் குன்வார் ஸேன் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கின்றார். கி.பி. 1153 வருஷத்தில் சௌஹான் வம்சத்தைச் சேர்ந்த விசாலதேவன் என்ற ஓர் பிரசித்தி பெற்ற அரசனிருந்தான். அவன் அஜ்மீரில் அநேக பாடசாலைகளையும் கோபுரங்களையும் கட்டியதுண்டு. அந்தக் கட்டிடங்களின் வேலைப்பாடும், டெல்லியிலுள்ள இந்தக் கோபுரத்தின் வேலைப்பாடும் ஏறக்குறைய ஒன்றுபோலிருக்கின்றன. மேலும் ஸ்ரீயுத. வைத்தியா என்பவர் எழுதியுள்ள புத்தகத்தில் அந்த நிருபன் அநேக யுத்தங்களில் ஜயம் பெற்றானென்பதை விளக்கியிருக்கின்றார். விசாலதேவ சக்கிரவர்த்தியின் கீர்த்திகளைப்பற்றி டெல்லியில் உள்ள அசோகா ஸ்தூபமொன்றிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. அஜ்மீரிலுள்ள ஸைவாலிக் தூண்களிலுள்ள சில சாஸனங்களும் இதை ஆதரிக்கின்றன.

ஆகவே டெல்லியை அக்காலத்தில் முற்றுகையிட்டு ஜயித்த அந்த நிருபன் தனது பிரீதியைக் காட்டுவதற்கும் பராக்கிரமத்தை அறிவுறுத்துவதற்கும் ஒரு பெரிய கீர்த்தி ஸ்தம்பத்தைக் கட்டுமாறு ஏற்பாடு செய்திருப்பானென்பது ஏற்படுகின்றது.

ஆகவே குதுப்மினாரை விசாலதேவ விக்ரக ராஜனின் 'கீர்த்தி ஸ்தம்ப'மாகவோ 'ஜயஸ்தம்ப'மாகவோ கருதவேண்டும் என்பது ஸ்ரீயுத ராய்பகதூர் குன்வார் ஸேன் அவர்களின் முடிவு.

இந்த விஷயமானது தீவிரமாக விவாதிக்கப்பட்டு ஒரு முடிவு ஏற்பட்டாலொழிய பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு குதுப்மினாரைப் பற்றிய ஏதோ கட்டுக் கதைகளைச் சொல்லிக் கொடுப்பது பொருத்தமாகாது.

சரித்திர ஆராய்ச்சி என்பது ஒரு நல்ல சாமர்த்தியமாகும். எகிப்திலுள்ள பரோவா ஸ்தூபங்களையும், கிரீஸிலிருந்த பழைய நாகரிகத்தைப் பற்றியும் அறிவதற்காக பூமியை நோண்டி நோண்டி இன்னமும் ஆராய்ச்சியை நிறுத்தாமல் அநேக ஐரோப்பியர்கள் உழைத்து வருகின்றனர். அதே மாதிரி இந்தியா தேச சரித்திரத்தின் பழைய விஷயங்களின் உண்மைகளை அறிந்துகொள்ள நமக்கும் ஆவல் வளர வேண்டும். அதற்கென்று சில சரித்திர ஆராய்ச்சிகாரர்களும் இருக்கவேண்டும். அப்போதுதான் இந்த தேசத்தில் சரித்திர ஞானம் வளரும்.

ஷோக்கு வாழ்வு !

அழகுக்கு முதற்படி சாந்தமயம். அடுத்தபடி தெளிவு. அதற்கடுத்தபடி எளிமை. அந்தப்படியில் எளிமைக்குப் பதிலாக 'ஷோக்கு' வீற்றிருக்குமானால் அழகு தூள் தூளாகி விடும். எளிமை ஆத்மாவுக்குத் திருப்தி தரும். ஷோக்கு சதைத் திமிரை அதிகரிக்கும். தற்போது எளிய வாழ்வு. உலகுக்கு அத்தியாவசிய மென்பதை 'பிரபுத்த பாரதா'விலுள்ள ஓர் கட்டுரை தெரிவிக்கின்றது.

அழித்துவிடும் தன்மை

"மனித சமூகத்தை விட்டு இந்த ஷோக்கு வாழ்வு தொலைய வேண்டும். ஷோக்கு வாழ்வில் ஏதாவது அழகு இருக்கிறதா? ஆத்மானுபவம் தான் உண்டா? மனித சமூகத்தை உருப்படுத்தும் வழி தானிருக்கிறதா? அதில் காருண்யம் ததும்புகின்றதா? ஒரு நல்லது கூட அதோடு சேர்ந்தில்லை. ஆனால் அழிவுக்கு உடந்தையா யிருப்பது இந்த ஷோக்கு வாழ்வு. ஷோக்கு வாழ்வு என்பது ஒரு ஒட்டுவாரொட்டி. அது பிடித்த மனிதன் அதன் தளைகளில் சிக்கிக்கொண்டு அவதிப்படுகின்றான்."

சாம்ராஜ்ய வீழ்ச்சிகள்

மேலே சொன்ன கருத்துக்களை ஏதோ கிழவனுடைய அபிப்பிராயம் என்று எண்ணுகின்றீர்களா? இல்லவே யில்லை. சாதாரணமாக ரொம்ப ஷோக்கில் இருக்கும் மனிதர்களெல்லாம் உலகில் எந்த ரகமான மனிதர்களென்பதைப் பிரத்தியட்சமாகக் காணலாம். மனிதன் மட்டுமல்ல—பாபிலோன். ரோம், முதலிய ஏகாதிபத்தியங்கள் அழகாய் அமைக்கப்படுவதற்குப் பதிலாக, கல்வித் துறையை அபிவிர்த்தி செய்வதற்குப் பதிலாக ஷோக்கு வாழ்க்கையை விருத்தி செய்தன. அதன் பயனாக அடியோடு அழிந்தன.

செங்கிஸ்கான் செய்தது

செங்கிஸ்கான் என்ற பிரசித்தி பெற்ற வீரனைப் பற்றிய கதையொன்றுண்டு. தனது படை வீரர்களிடை ஷோக்கு வாழ்வு பரவாமலிருப்பதற்காக அவன் சில பிரத்தியட்சப் பிரமாணங்களைக் காட்டுவது வழக்கமாம். தனது நண்பர்களுள் சிலரை பட்டு பட்டான ஆடைகளும் ஆபரணங்களும் அணிந்துகொண்டு தன்னுடன் வரும்படியாகக் கூறுவானாம். எல்லோருமாகப் புதர் நிறைந்த காடு வழியே போவார்களாம். சாதாரணமான எளிய ஆடை அணிந்து செல்பவர்களுக்கு கஷ்டமே தோன்றாது. ஆனால் பிரயாணத்தின் கடைசியில் ஆடம்பர ஆடை அணிந்தவர்கள் வேர்த்து விறுவிறுத்துப் போவர். ஆடைகள் முள்ளில் சிக்கிக் கிழிந்து போயிருக்கும். இதே மாதிரி ஆகார விஷயங்களிலும் எளிய உணவே சிறந்ததென்பதை நிரூபிக்க செங்கிஸ்கான் ஏற்பாடு செய்ததுண்டு. விசித்திரமான விலையுயர்ந்த ஆகார வகைகளைத் தின்பவருக்கு எப்போதும் வியாதி ஏற்படுமென்பதை அவன் நேருக்கு நேரே நிரூபித்ததுண்டு. சாதாரணமாகப் பாலும் பழமும் உண்டு வருவதே உடலுக்கேற்ற ஆகாரம் என்று அவன் பிரசாரம் செய்து வந்தான்.

சம்பிரதாய 'ஷோக்'

ஆரோக்கியமான எளிய வாழ்வு படாடோபமான ஷோக் வாழ்வைவிட உயர்ந்தது, அழகானது என்பதைத் தற்காலம் அறிவுறுத்த வேண்டியிருக்கிறது. குடிசைத் தொழில் சரக்குகளும், மனிதன் கையினால் செய்யப்படும் சாமான்களும் இயந்திரப் பொருள்களைவிடப் பன்மடங்கு மேன்மையானது என்பதையும் எடுத்துக் கூறவேண்டி யிருக்கிறது.

அத்யாத்மீகத் துறையிலும் சில 'ஷோக்' சம்பிரதாயங்கள் நுழைந்திருப்பது உலகுக்கே பெரிய நஷ்டம்! ஏதாவது ஓர் வழியில் ஷோக் உணர்ச்சி ஊறிவிட்டால் அது பிற தடபுடல்களுக்கும் கொண்டுபோய் ஆளைத் தள்ளிவிடுகின்றதல்லவா?

பெரியோர் பட்டபாடு

தற்காலத்தில் இந்திய இளைஞர்களை இந்த ஷோக்குப் பேய் பிடித்து ஆட்டுவது இந்த தேச வாழ்வுக்கே ஹானி விளைவிப்பதாகும். ஷோக்கில் பிரியமில்லாதவர்கள் 'கட்டுப் பெட்டிகள்' என்று ஒதுக்கப்படுகிறார்கள். கேலி செய்யப் படுகிறார்கள். உலகில் பெரிய மனிதர்களின் பாடு எப்போதும் இப்படித்தான். கோன்புத்ஸன் (Confucius) என்ற ஞானியைப் பிடித்துக் கோர்ட்டில் நிறுத்திவைத்த உலகமல்லவா இது! பிளேதோ (Plato) என்ற ஞானியை உதவாக்கரை யென நினைத்து அடிமையாக விற்ற உலகம் இதுதானே. அரிஸ்தைதஸ் (Aristides) என்ற பெரியாரை மூடரென்று ஊரைவிட்டு ஓட்டியதாகக் கதை யிருக்கின்றதல்லவா? ஆனால் இதற்கெல்லாம் பெரியார் சலித்ததே கிடையாது.

எளிமையின் அழகு

எளிமையான வாழ்வினிடம் அருவருப்பு ஏற்படா திருந்தால் நாளடைவில் அதனுடைய சக்தி புலனாகும். பிறகு பக்தியும் ஏற்படும். இப்போது உலகத்தில் அறியாத்தனமான ஷோக்குக்கும் அறிவின் பெருமையான எளிமைக்கும் பலமான போர் நடந்து கொண்டிருக்கிறது. உண்மையான அழகு எதில் இருக்கிறது என்பதைச் சிறந்த ஹிருதயம் அறிந்துகொள்ளும். பெரிய பெரிய ஏகாதிபத்தியங்களை யெல்லாம் அழித்துப்போட்டது எது என்பதையும் பகுத்தறிவு சுட்டிக் காட்டும். உலகின் அழகு சாந்தமானது. தடபுடலற்றது. உலகில் 'ஷோக்கு' மறைந்தால்தான் உண்மையான அழகு எது என்பது கண்ணுக்குத் தோன்றும்.

"சரி புறப்படலாமா ஆக்டுக்கு!"

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க யாராரோ ஏதேதோ எழுதுகிறார்களே, பேசுகிறார்களே யாராவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொன்னதைப் போல 'மாற்று' சொன்னதுண்டா? "வேலை கிடைக்காது தீண்டாடுகின்ற யுவர்கள் அனைவரும் சினிமாவிலோ, டாக்கியிலோ ஆக்ட் பண்ணலாம்" என்பது ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஆலோசனை. யோசனை நல்லதுதான்! ஆனால் எந்த சினிமாக் கம்பெனியாவது ஆக்டர்கள் கிடைப்பதில்லையே என்று அழுததாக ஸ்ரீ சத்தியமூர்த்தி கேள்விப்பட்டதுண்டா? நண்பரொருவர் சினிமாக் கம்பெனி வைக்கத் தோட்டத்தை வாடகைக்கு எடுத்த அன்றைய தினத்திலேயே இருபது விண்ணப்பங்கள் வந்தனவாம். அதிருக்கட்டும்! பல சினிமாக் கம்பெனிகளைக் கிளப்ப மூலதனம் எங்கிருந்து ஸ்ரீ சத்தியமூர்த்தி சம்பாதித்துத் தரப்போகிறார்?

'கற்பனை அரசு' என்று சில வருஷங்களுக்கு முன்னே தமிழ்ப் பத்திரிகையொன்றில் ஓர் கதை வெளிவந்தது. ஒரு அரசன் பெரிய செல்வவானாயிருந்தானாம். அவன் ஒரு தடவை சந்தோஷ ஸ்திதியிலிருந்தபோது, "இனி நமது தேசத்தில் ஒவ்வொரு பிரஜையும் பல்லக்கில்தான் போகவேண்டும். பல்லக்கு அத்தனையும் நம் செலவில் செய்யப்படட்டும்" என்றானாம். 10 லட்சம் பல்லக்குகள் பண்ணி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஏழு, எட்டு பல்லக்கு விதம் வைக்கப்பட்டது. ஒரு நாள் காலையில் ஊரிலிருந்த ஒவ்வொருவனும் ஒவ்வொரு பல்லக்கில் நுழைந்து உட்கார்ந்துகொண்டிருந்தானாம். வெகு நேரம் உட்கார்ந்திருந்ததுதான் மிச்சம். பல்லக்குத் தூக்க ஆட்கள் வேண்டாமோ? அந்த மாதிரி எல்லா இளைஞரும் சினிமாத் தொழிலில் ஈடுபடலாம். ஆனால் சினிமாவுக்குக் காசு கொடுத்துப் பார்ப்பவர்களை எந்த தேசத்திலிருந்து வரவழைப்பது?

இங்கேயொரு பையன் சினிமாவில் ஆக்ட் செய்வதாலும் அங்கே இன்னொருவர் வக்கீலாயிருப்பதாலும் இந்தத் திண்டாட்டம் தீர்ந்து விடாது. பம்பாயில் மிஸ். காரா என்ற மாதரசியின் தலைமையில் பதினாயிரக் கணக்கான ஏழைகள் தெருவில் ஊர்வலம் சென்றதாக ஓர் செய்தி கேட்டோம். அந்த ஊர்வலத்தினால் நேரடியான பலன் ஏதும் இல்லாது போனாலும் தேசத்தின் நிலைமையை மோட்டார்ப் பிரமுகர்கள் அறிந்து கொள்ளத்தக்க பிரசாரமாக ஆயிற்று. அவ்வாறு உருப்படியான ஏதாவதொரு இயக்கத்தைப் பற்றி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பிரஸ்தாபித்திருந்தாலும் நன்றாயிருந்திருக்கும். 'கடப்பாரையை விழுங்கினவனை சுக்குக் கஷாயம் சாப்பிடச் சொல்லும்' ரீதியைப்போல முக்கியமான பிரச்சினைகளில் தேசத் தலைவர்கள் சில்லுண்டி ஆலோசனைகள் சொல்லலாமா?

இராத்திரி 'ஜமா'!

பகலிலேயே தூங்கி விழுகிற புண்யவான்களடங்கிய டெல்லி சட்டசபை ஓர் இராத்திரியில் நடந்ததென்றால் அன்றிரவு சபையினழகு எப்படியிருந்திருக்கும் என்பதை விவரிக்கத் தேவையில்லை. பல வருடங்களுக்கு முன்னே ரௌலட் மசோதா சட்டசபையில் விவாதிக்கப்பட்டபோது இரவு வெகுநேரம் வரை இதே சட்ட சபை நடந்ததை இப்போது நினைவுறுத்திக் கொள்வோம். இரவு பன்னிரண்டு மணியாயிருந்தபோதிலும் சபையில் அத்தனை பேருடைய ஹிருதயங்களும் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தன. உணர்ச்சி பொங்கி நின்றது. அந்தக் காட்சியையும், 1934-ம் வருஷத்தில் நடந்த இந்த ராத்திரி சட்டசபையின் அழகையும் கவனித்தால் மலைக்கும் மடுவுக்குமாயிருக்கிறது வித்யாசம்.

ஷுஸ்டரின் வரவுசெலவு மசோதா அஸெம்பிளி நர்த்தனம் செய்வது முடிந்து 'முத்தண்ணா' சபைக்கு அனுப்பப் படுவதற்காக அவசரக் கூட்டமொன்றை செவ்வாயிரவில் நடத்தினார்கள். பார்க்க வேண்டுமே தூங்குமூஞ்சிச் சபையின் அழகை! அன்றைக்கு 36 பேர்தான் விவாதத்தில் ஈடு பட்டார்கள். சபை முழுதும் ஒரே கொட்டாவியும் குறுகுறுப்பும். தமாஷாகப் பேசினால் கூட சிரிப்பதற்கு ஒருவருக்காவது திராணியில்லை. யாரோ ஒருவர் சபையின் விவாதம் முடிவடைய வேண்டுமென்று ஓர் தீர்மானம் கொண்டு வந்தார். தலைவரும் தலையையசைத்தார். சிலர் திடுக்கிட்டு விழித்தனர்.

தூங்கு மூஞ்சிகளோடு நடந்த அந்தச் சபையில், ஒரு மணி நேரம்பேசுவதென்று வந்திருந்த ஷுஸ்டர் துரை 20 நிமிஷ நேரமே பேசினால் போதுமென்று நினைத்துப் பேசினார். ஏதோ அழுது வழிந்துகொண்டே இரவு இரண்டு மணி வரை சபை நடந்தது. சில அங்கத்தினர்களை மறுநாள் மத்தியானம் வீட்டில் போய்ப் பார்த்தாலும் அப்போது கூட கட்டிலிலேயே கிடந்தார்கள்.

இப்படி இராக் கண்விழித்து சாதிக்கப்பட்ட மகத்தான காரியம் என்ன? தேசத்துக்கும் பரம பாதகமான ஓர் வரவு செலவு மசோதாதான்!

கிறுகிறுத்த மூளை

ஜர்மனியில் ஹிட்லரின் மூளை இப்போது மிக்க கிறுகிறுத்துப் போயிருக்கிறதென்பது தெரிகிறது. ஜர்மனியில் இருந்த யூதர்களையெல்லாம் வேட்டையாடித் துரத்திய அக்ரமத்தை உலகம் கண்டித்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஞானி ஈன்ஸ்டின் என்பவர் ஒரு யூதர். அவர் கண்டுபிடித்துள்ள 'கால-வெளிப் பிரமாணம்' விஞ்ஞான சாஸ்திரத்துக்கே ஒரு பெரிய கைங்கர்யம். அப்பேர்ப்பட்ட ஒரு மகா ஆராய்ச்சிக்காரர் யூத ஜாதியைச் சேர்ந்தவரென்ற ஒரே காரணத்துக்காக தேசத்தைவிட்டுத் துரத்தினான் இந்த ஹிட்லர். அது போதாதென்று ஈன்ஸ்டினுடைய சொத்துக்களையெல்லாம் ஹிட்லர் துரைத்தனம் பறிமுதல் செய்துவிட்டதாகப் போன வாரத்தில் ஓர் செய்தி வந்தது. ஏது? கிறுக்கு வரவர ஹிட்லருக்கு அதிகமாகி வருகிறது போலிருக்கிறதே! ஈன்ஸ்டினுக்கு இந்த சொத்து போனது திரணத்துக்குச் சமானம். அவரை எந்த நாடும் வரவேற்று உபசரிக்கத் தயாராயிருக்கிறது. ஆனால் ஹிட்லரின் ஜாதிக் கிறுக்கையும், அதிகார மமதையையும் உலகமெல்லாம் தூற்றுகிறது.

காணாமற் போன சங்கிலி

கண்டெடுத்த சிறுவனின் தூய தன்மை

ஒரு தங்க சங்கிலி காணாமற்போய் விட்டது. ஆனால், ஒரு ஹரிஜனச் சிறுவனின் நற்குணத்தின் பயனாக அது திரும்பக் கிடைத்து ஹரிஜன கைங்கர்யத்துக்கு உபயோகமாயிற்று என்பதை வாசகர்கள் கேட்டால் சந்தோஷப் படுவார்கள். பல்லடத்தினின்று ஸ்ரீயுத ஆர். எம். குமாரசாமி அடியிற் கண்டவாறு எழுதுகின்றார்.

“பூஜ்ய மகாத்மாஜிக்கு,

தாங்கள் திருப்பூரிலிருந்து கோயமுத்தூருக்குப் போகும் வழியில் 450 ரூபா அடங்கிய பணப்பை யொன்றைப் பல்லடம் என்ற இடத்தில் கொடுக்கப் பட்டது. அவ்விடத்திலுள்ள எனது சகோதரியின் நாலு வயதுப் பெண் தனது தங்கச் சங்கிலியைத் தங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று வீட்டில் சொன்னாள். பெரியம்மாளுக்கு இது பிடிக்கவில்லை. ஆகவே, அவள் அந்தச் சங்கிலியை வாங்கித் தன்னிடம் வைத்துக் கொண்டாள். தாங்கள் பல்லடத்திற்கு வந்திருந்தபோது அங்கு கூடியிருந்த பெருங்கூட்டத்தில் பெரியம்மாள் சங்கிலியைப் போக்கடித்து விட்டாள். குழந்தையின் ஆசையின்படி நடக்காததால்தான் இந்த நஷ்டம் சம்பவித்ததென்று நான் கூறினேன்.

இரண்டு வாரமாயிற்று. இந்தச் சங்கிலியைப்பற்றி துப்புக் கிடைத்தது. பத்தே வயதுள்ள ஒரு ஹரிஜனப் பையன் அதிருஷ்ட வசமாக அந்தச் சங்கிலியைக் கண்டெடுத்தானாம். அவன் அடுத்த ஊரைச் சேர்ந்தவன். இந்த சமாச்சாரம் தெரிந்து 15 நாள் கழித்து அந்தப் பையனின் தந்தையிடம் சென்று நாங்கள் விசாரித்தோம். ஏது ஆகுமோ என்ன வாகுமோ என்ற பயத்தினால் அவர் முதலில் சரியாகப் பதில் சொல்ல வில்லை. நான் தங்கள் விஜயத்தைப் பற்றி அவரிடம் விவரித்த பின்பு, காணாமற்போன ஒரு வஸ்துவைக் கண்டெடுத்து வைத்திருப்பதில் குற்ற மில்லையெனக் கூறிய பின்பு அவருக்கு சரியான புத்தி வந்து சங்கிலியையும் திரும்பக் கொடுத்து விட்டார். அவருக்கு 25 ரூபாய் சன்மானமாக நான் தந்தேன். அந்த சன்மானத்தினால் சந்தோஷ மடைந்து ‘இனி நான் கள்ளுக் குடிப்பதில்லை’ யென அவன் பிரமாணம் செய்தார். இங்குள்ள ஹரிஜன சமூகத்தில் யோக்கியரென அவருக்குப் பெயருண்டு.

குழந்தையின் ஆசைப்படிக்கு இந்தச் சங்கிலியை உங்களுக்கே அனுப்பி விட வேண்டுமென குடும்பத்தில் எல்லோரும் சொல்கின்றார்கள். ஆனால் ஒரு வேண்டுகோள். இந்தச் சங்கிலியினால் கிடைக்கும் பணம் பல்லடத்தில் ஹரிஜன சேவை செய்ய உபயோகிக்கப் படவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரதேசங்களில் ஹரிஜன வேலை செய்ய இது சுப சகுனமாக இருக்கட்டும்.”

இந்தக் கடிதத்தை எழுதிய நண்பருக்கு அவர் விரும்பியபடியே பணம் உபயோகிக்கப்படும் என்று பதில் எழுதிவிட்டேன். காணாமற் போன சாமான் கண்டெடுத்தவனுக்குச் சொந்தம் என்று நினைத்திருப்பது தவறு. கண்டெடுத்த சாமானின் சொந்தக்காரர் யாரெனத் தெரியாவிட்டால் அந்த சொத்து அரசாங்கத்தைச் சேர்ந்தது. இங்கே அந்தச் சங்கிலியைக் கண்டெடுத்த ஹரிஜனர் அதைச் சொந்தக்காரருக்கே திருப்பித் தந்தது பற்றி அவரைப் பாராட்டுகின்றேன். நாலு வயதுப் பெண் குழந்தை இவ்வளவு பிடிவாதமாக ஒரு தர்ம புத்தி கொண்டிருந்ததையும், கடைசியில் அவளுடைய குடும்பத்தினர் குழந்தை இஷ்டப்படி செய்ததையும் நான் பாராட்டுகின்றேன். இந்த மாதிரி ஹரிஜன இயக்கத்துக்காக எவ்வளவோ சிறுமிகள் தங்கள் நகைகளைத் தந்திருக்கின்றனர் என்பதையும் இங்கு சொல்ல வேண்டு மல்லவா?

மோ. க. காந்தி.

தோத்திர வழி

(மகாத்மா காந்தி)

அநேக சமயங்களைத் தழுவிய நண்பர்கள் எனக்குண்டு. ஆனால், தீண்டாமையை ஒழிக்க நான் எடுத்துக்கொண்டுள்ள காரியத்தில் எல்லோரும் உதவுவதற்குத் தயாராயிருக்கின்றனர். இந்தச் சீர்திருத்தத்தைச் செய்வதற்கு உலகத்தில் எல்லோருடைய பூர்ண உதவியையும் நான் வேண்டி நிற்கின்றேன். உலகத்தில் ஒவ்வொரு மதஸ்தர்களும் எவ்வாறு பிரார்த்தனை செய்கின்றனர் என்பதை நான் கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு சமயத்தாரும் இந்த இயக்கத்திக்கு உதவ வேண்டியதுதான். ஆனால் ஒரு கேள்வி. நான் ஒரு ஹரிஜனச் சிறுவனை ஒரு கிறிஸ்தவரிடமோ, முஸ்லீமிடமோ அல்லது ஒரு ஸ்தாபனத்திடமோ விடுவதாக வைத்துக்கொள்வோம். அவர்கள் அச் சிறுவனை என்ன செய்வார்கள்? சிறுவனை ஹிந்துவாகவே வளர்ப்பார்களா? அல்லது தங்கள் மதத்துக்கு அவனை மாற்றிக் கொள்வார்களா? நான் எல்லா மதங்களிலும் உண்மையிருப்பதாகவே நம்புகிறேன். மனித வாழ்க்கையின் ஆத்மீக வளர்ச்சிக் கான ஒரு தேவையை மதங்கள் பூர்த்தி செய்கின்றன. ஆகவே என்னிடம் விடப்படும் குழந்தை எந்த மதத்தில் பிறந்த தாயினும், கிறிஸ்துவனாயினும், முஸ்லீமாயினும், பார்ஸியாயினும் அதை அதே மதத்திலேயே நான் வளர்த்து வருவது வழக்கம். அந்த மாதிரி வளர்த்து வருவதற்கு பொதுவான பிரார்த்தனை சுலோகமுண்டா என்று கேட்பவர்களுக்குச் சாதகமாக அடியிற் கண்ட பிரார்த்தனை இருக்கின்றது.

“ஈசனே! நீ படைத்த ஜீவராசிகளுக்கெல்லாம் அறிவைக்கொடு! அவனவனுக்குத் தோன்றும் வெளிச்சத்தின்படி அவனவன் நம்பிக்கையை ஊன்றுகோலாகக் கொண்டு உன்னை அடைவானாக.”

ஜார்ஜ் கார்வார்

(தீனபந்து ஆண்ட்ரூஸ் எழுதியது)

[“ஜார்ஜ் கார்வரின் சரிதத்தைப் படித்தால் ஹரிஜனங்களுக்கும், அல்லாதவர்களுக்கும் முக்கியமாக பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கும் பெரிதும் பயனுண்டு என்பது நிச்சயம்” என மகாத்மா காந்தி ஓர் குறிப்பு எழுதி தீன பந்துவின் கட்டுரையை அனுப்பி யிருக்கின்றார்.]

ஜார்ஜ் கார்வார் நீகிரோ அடிமைக் குடும்பத்தில் 1864௵ பிறந்தவர். தாயும் ஓர் அடிமைப் பெண். தந்தையும் ஓர் அடிமை. சிலமாதக் குழந்தையாயிருந்தபோது இவரை சும்மா தெருவிலே போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். பிறகு எவனோ கண்டெடுத்து வளர்த்துப் பிற்காலத்தில் ஒரு பந்தயக் குதிரைக்கு மாற்றாக இன்னொருவரிடம் விற்றுவிட்டான். அப்போது இந்த அடிமையின் விலை 300 டாலராம்! எப்படியோ பால்ய வயதை கார்வார் தாண்டினான். பிறகு அனாதையானான். தெருத்தெருவாகப் பிச்சை யெடுத்துக் கொண்டும் காட்டில் வீடு வாசலின்றி அலைந்துகொண்டும் காலங் கழித்தான். காட்டிலிருந்தபோது பட்சிகள் இனத்தைப் பற்றியும் ஸ்தாவர வஸ்துக்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்து கொண்டே அலைந்தான். பிறகு படிக்கக் கற்றுக் கொண்டார். அன்றிருந்து புத்தகமும் கையுமாகி வயது வரும்போது பெரிய விஞ்ஞான நிபுணராகி விட்டார். இன்றைக்கும் அவர் மிகமிக எளிய வாழ்விலேயே இருப்பதில் சந்தோஷம் கொண்டு வாழ்கின்றார். கடவுளிடம் அபாரமான பக்தி உண்டு.

நான் அமெரிக்காவின் தென்பாகங்களுக்குப் போயிருந்தபோது டஸ்கஜியிலுள்ள கலாசாலைக்குப் போயிருந்தேன். நீகிரோ சமூகத்தில் எவ்வளவு முன்னேற்றத்துக்கு இடமுண்டு என்பதை அந்தக் கலாசாலை காட்டிற்று. இதை நடத்துபவர்கள் அமெரிக்க நீகிரோக்கள். மிகமிக உயர்ந்த முறையில் இது நடத்தப்படுகிறது. அங்கு தலைவர் டாக்டர் கார்வார். அவருடைய யோக்கியதையும், முதிர்ந்த அநுபவமும், அறிவும் பெரிதும் உபயோகப்படுகின்றன. விஞ்ஞானத் துறையில் ஏராளமான முயற்சிகள் அக் கலாசாலையில் செய்யப்பட்டிருக்கின்றன.

மின்சார வெளிச்சத்தைக் கண்டு பிடித்த எடிஸனுடைய அவ்வளவு அறிவும் டாக்டர் கார்வாரிடம் இருக்கின்றது. உருளைக் கிழங்குகளின் தினிஸுகளைப் பரிசோதித்து உணவுக்கான உருளைக்கிழங்குகளையும், வர்ணச் சரக்குக்கான கிழங்குகளையும் பயிரிடும் முறைகளை அவர் கண்டு பிடித்திருக்கிறார். குப்பையில் போடத்தக்க சாமான்களைக் கொண்டு உபயோகமான பண்டங்களைச் செய்யும் பல வழிகளை அவர் கண்டுபிடித்து வைத்திருக்கின்றார்.

பல வருஷங்களுக்கு முன்னே எடிஸனுடைய விஞ்ஞானச் சாலையில் போதகராக வரும்படி டாக்டர் கார்வாரை அழைத்தார்கள். டாக்டர் போயிருந்தால் கொள்ளை கொள்ளையாகப் பணம் சம்பாதித்திருக்கலாம். ஆனால், அவரோ தமது அறிவை தமக்குப் பிரியமான டஸ்கஜி பள்ளிக்கூடத்துக்கே செலவிடுவதென தீர்மானித்து விட்டார். பிரிட்டிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளும் அவரைப் புகழாத நாளில்லை.

ஒரு தடவை பருத்திப் பயிர் அந்தப் பிரதேசங்களில் விளையவே விளையாதோ என்றிருந்தது. டாக்டர் ஏதேதோ ஆராய்ச்சிகள் செய்து அந்தக் களிமண் பூமியில் பருத்திப் பயிர் விளைக்கும் விதமொன்றைக் கண்டு பிடித்தார். உருளைக் கிழங்குப் பயிரை ஓங்கச் செய்யும் முறைகளையும் கண்டு பிடித்துத் தந்தார். அந்தப் பிரதேசத்திலுள்ள அத்தனை குடியானவர்களுக்கும் தகப்பனார் போல அவர் விளங்குகிறார். வெள்ளைக்காரர்களைவிட அதிக குடும்பத் தொல்லையுடைய நீகிரோ ஜாதியார் அந்தப் பிரதேசங்களில் மிகவும் கஷ்டப்பட்டதுண்டு. அந்த நிலைமைகளை யெல்லாம் மாற்றிவிட்டவர் இவர்தான்.

—ஹரிஜன்.

ஸ்ரீ கிருஷ்ணரும் ஹரி ஜனங்களும்

ஸ்ரீமத் பாகவத புராணத்தில் இரண்டு சுலோகங்க ளிருக்கின்றன. துவாரகைக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நெடுநாள் கழித்துத் திரும்பிய போது அவரை ஹரி ஜனங்களுள்பட (आश्वपाके भ्योः) எல்லா நகரவாசிகளும் வரவேற்றனராம். சிலர் பகவானை நமஸ்காரம் செய்தனர்; சிலர் ஆலிங்கனம் செய்தனர்; சிலர் புன்னகைக் காட்டி வரவேற்றனர் என்று விவரிக்கப் பட்டிருக்கிறது. தன் பந்துக்களை யெல்லாம் கண்டு பேசுவதற்கு முன்னமேயே ஏழை ஹரிஜனங்களை அணைத்து ஆதரித்தார் கண்ணன் என்கிறது புராணம். அவர்களுக்குத் தானே அவன் தேவை!

* ...... प्राविशत्पुरीम् ॥ १० ॥
भत्रवांस्तत्र बन्धूनां
पौराणामनुवर्तिनाम् ।
यथाविध्युपसंगम्य
सर्वेषां मानमादधे ॥ २० ॥
प्रह्वाभिवादनाश्लेष
करस्पर्शस्मितेक्षणैः ।
आश्वास्य चाश्वपाकेभ्यो
वरैश्चाभिमतैर्विभुः ॥ २१ ॥
भात्रवत स्क० १, अ० ११ ॥

—வால்ஜி தேசாய்.

டெல்லி சர்வகலாசாலையில்

இனி டெல்லி சர்வ கலாசாலைப் பரீட்சைகளில் கலந்து கொள்ளும் ஹரிஜன மாணவர்கள் 1940௵ முடிய பணங்கட்ட வேண்டாமென்று டெல்லி சர்வ கலாசாலைச் சபை தீர்மானித்திருப்பது கேட்டு சந்தோஷம்.

ஆனால் சென்னை சர்வகலாசாலை அத்தகைய தீர்மானத்தைப் புறக்கணித்து வருந்தத்தக்க விஷயமல்லவா?

Have your Majestic
FIGURE
At
R. DASEN STUDIO.
The Best
AND MOST UP TO DATE STYLE & FINISH
ELECTRIC PHOTO ARTISTS
No. 55 RATTAN BAZAAR ROAD MADRAS
STUDIO HOURS 8 A.M to 8 PM

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. Foreign Rs. 6.

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of 2¼" × 9"

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1	8	0

ஒரு பக்கம் 2¼" × 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

"His Master's Voice"

நம்பிக்கை வாய்ந்தது

பாடகரின் குரலை மிகவும் சுத்தமாக எடுப்பதையே "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெனியார் எப்போதும் இலட்சியமாய்க் கொண்டிருக்கிறார்கள்; செலவை அவர்கள் பாராட்டுவதில்லை. விடாமல் ஊக்கத்தோடு இவ்விஷயத்தில் அவர்கள் உழைத்து வந்திருப்பதால் தான், அவர்களுடைய கிராமபோன்கள் இன்று உலகத்தில் முதல் தரமாயிருக்கின்றன; பாடகர் குரலை உள்ளபடி சுத்தமாய்க் காட்டுகின்றன; நீடித்த காலமும் உழைக்கின்றன.

நீங்களே நிர்ணயித்து கொள்ளுங்கள்



உங்களுக்குச் சமீபத்திலுள்ள ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் வியாபாரி ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் மெஷின்களை நேரில் வைத்துக் காண்பிப்பார்.



ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

கிராமபோன் கம்பெனி, லிமிடெட்.

ஸௌத் பரேட், பெங்களூர்.

… Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.